உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 தை 01 வியாழக்கிழமை (15-01-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:50

# ஜனாதிபதியுடன் திரைமறைவில் பேச்சா? அடியோடு மறுக்கின்றார் தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி,ஜன.15

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுதலைப் புலிகளுடன் திரைமறைவில் சமரச முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார் என்று வெளிவரும் செய்திகளில் எந்த உண்மையும் இல்லை. அவ்வாறான நடவடிக்கையை எமது தலைவர் விரும்பவும் இல்லை. சமாதான முயற்சிகளையோ அரசியல் முன்னெடுப்புக்களையோ மக்களுக்குத் தெரியப்படுத்தும் விதத்தில் பகிரங்கமாக மேற்கொள்வதையே எமது தலைவர் விரும்புகிறார்.

- இப்படிப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் சமாதான செயலகத்தில் வைத்து உதயனுக்கு அளித்த பிரத்தியேக செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அளித்த செவ்வியின் விவரம் வருமாறு:-

★ கேள்வி: அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்பாட்டில் இருந்து தான் விலகுவதாக பிரதமர் ரணில் அறிவித்துள்ளார். இதுகுறித்து தங்கள் அமைப்பின் நிலைப்பாடு...?

■ பதில் : எம்மைப் பொறுத்தவரை, யுத்தநிறுத்த உடன்பாட்டில் இருந்து ஒருதலைப்பட்சமாக விலகும் நோக்கம் எமக்கு இல்லை. இந்த உடன்பாடு தமிழ் மக்களினதும் சிங்கள மக்களினதும் சமாதானத்துக்கான தேடல்; சமாதானத்துக்கான ஆர்வம்.

இந்நாட்டில் நிலவும் இனப்பிணக்குக்குத் தீர்வுகாணவேண்டும் என்பதும் நெருக்கடிகளில் இருந்து மீளவேண்டும் என்பதும் நாட்டில் உள்ள சகல மக்களினதும் நிலைப்பாடாகும். அந்த எதிர்பார்ப்பின் வெளிப்பாடாக உருவானதே இந்த உடன்பாடு.




எமது தலைவர் ஒரு தலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்திருந்தார். பேச்சுக்கான முயற்சிகளை அவர் ஏற்படுத்தினார். இந்தவகையில், யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கு ஒரு சர்வதேச அனுசரணைத் தரப்பு இருக்கின்றது; சர்வதேச ஆதரவு இருக்கின்றது. பல்வேறு நாடுகளின் பிரதிநிதிகளைக் கொண்ட கண்காணிப்புக்குழு செயற்படுகின்றது. யுத்தநிறுத்தத்தை அவர்கள் கண்காணிக்கிறார்கள். அந்த அடிப்படையில், இந்த உடன்பாடு செம்மையாக நடைமுறையில் உள்ளது.

ஊடகங்களில் வரும் அதிகாரபூர்வமற்ற செய்திகளை வைத்துக்கொணடு நாங்கள் முடிவுகளைச் சொல்லமுடியாது.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இருந்து அரசும், படைகளும் விலகிக் கொள்வதாக இருந்தால் அது குறித்து எமக்கு 14 நாள்களுக்கு முன்னதாக அனுசரணையாளர் ஊடாகவோ அல்லது கண்காணிப்புக் குழு ஊடாகவோ அதிகாரபூர்வ அறிவித்தல் தரப்படவேண்டும். அதன்பின்புதான், இந்த உடன்படிக்கை சம்பந்தமான எமது முடிவுகளை நாம் மீளாய்வு செய்யவேண்டும்.

பிரதமரின் அறிவிப்பை மட்டும் வைத்துக்கொண்டு யுத்தநிறுத்த உடன்படிக்கை குறித்துக் கருத்து ஏதும் கூறமுடியாது. அதிகாரபூர்வமாக செய்திகள் எவையும் எமக்கு இது வரை கிடைக்கவில்லை.

★ கேள்வி: யுத்தநிறுத்த உடன்

(16ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு-கிழக்கு தேவைகள் கிளிநொச்சியில் மதிப்பீடு

## விடுதலைப் புலிகள் 19இல் நடத்துகிறார்கள் உதவும் நாடுகள், நிறுவனங்களுக்கு அழைப்பு

கிளிநொச்சி,ஜனவரி15

**வடக்கு - கிழக்கின் தேவைகளை மதிப்பிடும் விசேட கூட்டம் ஒன்று எதிர்வரும் 19ஆம் திகதி கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் அபிவிருத்திச் செயலகத்தில் இடம்பெறவுள்ளது. இந்தியா உட்பட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், நிறுவனங்கள் ஆகியவை கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளன.**

இந்தச் செயலகப் பொறுப்பாளரும் விடுதலைப் புலிகளின் பொருளாதார ஆலோசகருமான ஜோய் மகேஸ்வரன் இதனைத்தெரிவித்தார்.

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கொழும்பில் உள்ள தூதரகங்களில் பணியாற்றும் திட்டமிடல், அபிவிருத்தித்துறை சார்ந்த அதிகாரிகளும், உதவி வழங்கும் நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்கா, ஜப்பான், இந்தியா ஆகிய நாடுகள் உட்பட 20இற்கும் மேற்பட்ட உதவி வழங்கும் நாடுகளுக்கு இந்தக் கூட்டத்துக்கு அழைப்பு அனுப்பப்பட்டது என்றும் -

பிரிட்டன், ஜேர்மன், சுவிஸ், நெதர்லாந்து, நோர்வே ஆகிய நாடுகள் அழைப்பை ஏற்றுள்ளதாக அறிவித்

(16ஆம் பக்கம் பார்க்க)


நோர்வேத் தூதர் - தமிழ்ச்செல்வன் நேற்று சந்தித்தபோது....

# மாத இறுதியில் தமிழ்ச்செல்வன் ஐரோப்பாவுக்கு சுற்றுப் பயணம்

## நோர்வேயில் முக்கிய சந்திப்புக்கள்

கிளிநொச்சி,ஜன.15

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செலவன் இம்மாத இறுதியில் ஐரோப்பிய நாடுகளிற்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றார். இந்த விஜயத்தின்போது அவர் நோர்வேக்கும் செல்கின்றார். தடைப்பட்டிருக்கும் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பது தொடர்பாக நோர்வே சமாதானக் குழுவினருடன் அங்கு அவர் பேச்சுக்களை நடத்துவார்.

நேற்று கிளிநொச்சிக்கு வருகை தந்த நோர்வேத் தூதுவர் ஹன்ஸ் பிரஸ்கர் இத்தகவல்களை வெளியிட்டுள்ளார்.

நோர்வே விஜயத்தின்போது அந்

(16ஆம் பக்கம் பார்க்க)




வாசகர்கள், விளம்பரதாரர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் 'உதயன்' குடும்பத்தினரின் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

## 38 பக்கங்களுடன் உதயன்

**தைப்பொங்கல் பண்டிகையை ஒட்டி இன்றைய உதயன் மொத்தம் 38 பக்கங்களுடன் வெளிவந்துள்ளான்.**

**இருபது பக்கங்கள் அடங்கிய கண்கவர் பொங்கல் சிறப்பிதழ் இன்றைய உதயனுடன் இணைப்பாக வெளியாகின்றது. அதனையும் சேர்த்துப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

# சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி. 20ஆம் திகதி உடன்படிக்கை

கொழும்பு,ஜன.15

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் தமக்கிடையிலான முக்கியத்துவம் வாய்ந்த உடன்படிக்கையில் எதிர்வரும் 20ஆம் திகதி கைச்சாத்திடவுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய இரு கட்சிகளும் எதிர்வரும் இருபதாம் திகதி கூட்டுச் சேருகின்றன.

அன்றைய தினம் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இது குறித்த உடனபடிக்கை கைச்சாத்திடப்படும்.


ஜே.வி.பி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பிரதிநிதிகளுக்கு இடையே நேற்று கொழும்பில் நடந்த இரு

(16ஆம் பக்கம் பார்க்க)

# கிட்டு நினைவுதினம் நாளை

வடமராட்சி,ஜன.15

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் பதினோராவது நினைவுதினம் நாளை வெள்ளிக்கிழமை தமிழர் தாயகம் எங்கும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.



கடந்த 1993ஆம் ஆண்டு சர்வதேச கடற்பரப்பில் வைத்து இந்திய அரசின் சதியினால் வீரகாவியமான இவ்வேங்கைகளின் நினைவுதினத்தை ஒட்டி குடாநாட்டில் நினைவுச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன; வீதிகள் தோறும் நினைவுப் பதாதைகளும் கட்டப்பட்டுள்ளன.

பிரதான நினைவு நிகழ்வு வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள தீருவில் சதுக்கத்தில் அன்றையதினம் மாலை 5 மணிக்கு நடைபெறும்.

மாவீரர்களின் பெற்றோர்கள் 'பாண்ட்' வாத்தியசகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்படுவதுடன், நினைவு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். கொடியேற்றல், ஈகச்சுடரேற்றல், பொதுச்சுடரேற்றல் ஆகிய

(16ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்காலத் தடை நீடிப்பு!

கொழும்பு,ஜன.15

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் என்ற ரீதியில் வீ.ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனு தொடர்பாக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்டிருக்கும் இடைக்காலத் தடை உத்தரவு எதிர்வரும் 26ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது. இத்தடை உத்தரவை நீக்கக் கோரி எதிர்மனுதாரர்களான கட்சியின் செயலாளர் இரா.சம்பந்தன், சுரேஷ் உதபதலைவர் ஜோசப் பர

(16ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

### ஏ - 9 பிரதான வீதியில்

# போக்குவரத்து நேரத்தை அதிகரிப்பதற்கு செஞ்சிலுவைக் குழுவின் முடிவு இல்லை

## இராணுவம் தயாராகவிருக்கிறது என்கிறார் மாவட்டத் தளபதி



ஏ-9 தரைப்பாதையை மக்களின் போக்குவரத்துக்கு அனுமதிக்கும் நேரத்தை அதிகரிப்பதற்கு படைத்தரப்பு தயாராகவுள்ளது. இதுதொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது முடிவைத் தெரிவிக்காததனால் இதுவிடயத்தில் தாமதங்கள் ஏற்படுகின்றன என்று யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால தெரிவித்துள்ளார்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழுப் பிரதிநிதிகளுக்கும் படைத் தரப்புக்கும் இடையில் நேற்றுக் காலை யாழ்.ஆயர் இல்லத்தில் சந்திப்பு இடம்பெற்றது. இக்கலந்துரையாடலின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சமாதானத்திற்கும் நல்லெண்ணத்துக்குமான குழுவின் தலைவர் டி.ஆர்.அருமைநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்குடாநாட்டில் குறிப்பாக நகரை அண்டிய பகுதிகளில் இரவுநேரங்களில் திருட்டுச் சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்குப் படையினரும் பொலீஸாரும் இணைந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர் என்று இராணுவத் தளபதி கூறினார் என்றும் அவர் கூறினார்.

படைத்தரப்பில் யாழ்.மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால, பிரதித்தளபதி மேஜர் ஜெனரல் ரி.ஆர்.சில்வா மற்றும் யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ஹெரல் அன்ரனி உட்படப் பல உயர் அதிகாரிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

சமாதானத்துக்கும் நல்லெண்ணத்துக்குமான மக்கள் குழு சார்பில் அதன தலைவர் ஆர்.டி.அருமைநாயகம், இணைச் செயலாளர்களான வண. பிதா ஜே.பி.ஈ.செல்வராசா, எஸ்.பரமநாதன், யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை, நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் -

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, வணபிதா சி.ஜி.ஜெயக்குமார் அடிகளார், எஸ்.ஜெயசேகரம், வங்கி முகாமையாளர் எஸ்.நடராஜலிங்கம், பொறியியலாளர் கே.பூரணசந்திரன, வண.பிதா ஜேக்கப் நிக்கலஸ், வி.திருநாவுக்கரசு, வண.பிதா ஏ.எவ்.ஜெயசேகரன், வண.பிதா எஸ்.பி.நேசகுமார் மற்றும் இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் க.பாலசுப்பிரமணியம் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இச்சந்திப்புத் தொடர்பாகத் தலைவர் அருமைநாயகம் மேலும் தெரிவித்ததாவது:-

குடாநாட்டில் மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சீராக்குதல், உயர் பாதுகாப்பு வலயத்தினால் மீளக் குடியமர முடியாதுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், கண்ணிவெடி அகற்றுதல், கடற்றொழிலாளர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், படையினரின் பாவிப்பிலுள்ள கட்டடங்களின் உரிமையாளர்களுக்குப் பல மாதங்களாக வாடகைப் பணம் வழங்கப்படாமை போன்ற பல்வேறு விடயங்கள் பற்றி இராணுவத் தளபதிக்கு விளக்கமாக எடுத்துக்கூறப்பட்டது.

மக்களின் போக்குவரத்திற்காக கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்துவிடுமாறும் - ஏ-9 பாதையின் பயன்பாட்டு நேரத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதற்கு சங்குப்பிட்டி - கேரதீவுப் பாதையை உடனடியாகத் திறப்பது சாத்தியமில்லை என்று தளபதி கூறினார்.

ஏ-9 தரைப்பாதையில் மக்கள் போக்குவரத்திற்கான நேரத்தை அதிகரிப்பதற்கு படைத்தரப்பு தயாராகவுள்ளது. ஆனால் இதுதொடர்பாக செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது முடிவை இதுவரை தெரிவிக்கவில்லை. இதனால் அதனை நடைமுறைப்படுத்துவது கடினமாகவுள்ளது என்றும் - அவர் கூறினார்.

யாழ்.குடாநாட்டில் உள்ள மக்கள் சந்தோஷமாக வாழ்வதற்கு என்ன செய்யவேண்டுமோ அவற்றைச் செய்வதற்குப் படைத்தரப்பு தயாராகவுள்ளது. அதுமட்டுமல்லாது, இராணுவம் மற்றும் பொலீஸார் மீது பொதுமக்கள் நம்பிக்கை வைக்கும் வகையில் அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

பொதுமக்கள் படையினராலோ அன்றி பொலீஸாராலோ இடையூறுகளுக்கு உள்ளாக்கப்பட்டால் அது பற்றித் தமக்கு உடனடியாகத் தெரிவிக்கலாம் என்றும் இராணுவத் தளபதி தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள் எதுவித கெடுபிடிகளும் இன்றிச் சென்று வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வசாவிளான் மத்திய மகாவித்தியாலயம் இயங்குவதற்கு அனுமதித்தபோதிலும், அது இதுவரை இயங்கவில்லை. மாணவர்கள் பாடசாலைக்குச் செல்வதற்குத் தயாராகவிருந்தால் அவர்களுக்கு வேண்டிய பாதுகாப்பைப் படையினர் வழங்குவர் என கட்டளைத் தளபதி தெரிவித்தார் என்றும் அருமைநாயகம் மேலும் தெரிவித்தார்.

உயர் பாதுகாப்பு வலயத்தில் தற்போது மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் மீளக்குடியமர்வதற்கும் அங்குள்ள விவசாய நிலங்களில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள மாலை 6 மணிவரை அனுமதிக்குமாறும் -

யாழ்.மின்சார வீதியிலுள்ள சோதனைச் சாவடியைப் பின்நகர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் படைத் தளபதியிடம் . கோரிக்கை விடுக்கப்பட்டது என்றும் அவர் மேலும் சொன்னார். (ம-5-9)

# பாடசாலைக் கட்டடம் நேற்று திறந்து வைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.15

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் 27 வருடங்கள் அதிபராகப் பணியாற்றிய செல்வி பேஜ் ஞாபகார்த்தமாகக் கல்லூரியில் அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதி நேற்றுக்காலை 9.30 மணிக்குத் திறந்துவைக்கப்பட்டது.

குருநாகல் மறைமாவட்டப் பேராயரும் அங்கிலிக்கன் திருச்சபைப் பாடசாலைகளின் ஆளுநர் சபைத் தலைவருமான அதிவண. குமார இலங்கசிங்க கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்தார்.

பிரார்த்தனை அறை, கேட்போர் கூடம், கணனி வகுப்பறைகள், ஆங்கிலபாட அலகு மற்றும் வகுப்பறைகளைக் கொண்ட இக்கட்டடத் தொகுதியின் ஒவ்வொரு பிரிவும் ஒவ்வொரு பிரமுகரினால் திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், கல்லூரியின் பழைய மாணவர் சங்க லண்டன் கிளையின் செயலாளா கருணாராணி விமலநாதன், பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையைச் சேர்ந்த திருமதி சாமினி மாசிலாமணி உட்படப் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், கல்விச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் எனப் பெருமெண்ணிக்கையானோர் விழாவில் கலந்து கொண்டனர்.

### இணையத்தளம்

புதிய ஞாபகார்த்த கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்பட்டதைத் தொடர்ந்து கல்லூரிக்கென WWW.Chundikuli-girls-College.slt.lk என்ற இணையத்தளத்தையும் பேராயர் அதிவண. குமார இலங்கசிங்க சம்பிரதாய பூர்வமாகத் தொடக்கிவைத்தார். ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் உதவியுடன் இந்த இணையத்தளம் உருவாக்கப்பட்டது.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின சரித்திரத்தையும், ஏனைய விவரங்களையும் வெளிநாடுகளில் வாழும் கல்லூரியின் பழைய மாணவிகள் இந்த இணையத்தளம் மூலம் அறிந்துகொள்ள வசதி ஏற்பட்டுள்ளது.

forward 12@slt net.lk என்ற மின்னஞ்சல் முகவரியில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் கல்லூரி நிர்வாகத்தினருடன் தொடர்புகொள்ள முடியும் என்று ரெலிகொம் நிறுவன அதிகாரி ஒருவா உதயனுக்குத் தெரிவித்தார்.(எ-10)

# கல்வியியற்கல்லூரி மாணவர் விடுதியில் தொற்று நோய்கள்!

## சிகிச்சைக்காக பலர் ஆஸ்பத்திரியில் சேர்ப்பு

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் சிலர் திடீரென காய்ச்சல், வயிற்றோட்டம் ஆகிய நோய்களினால பீடிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த நோய்களினால் பீடிக்கப்பட்ட மாணவர்கள் சிலர் நேற்றும், நேற்று முன்தினமும் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த தொற்று நோய் பரவலுக்கான காரணங்கள் உடனடியாகக் கண்டறியப்படவில்லை.

எனினும், விடுதியில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உணவில் ஏதாவது ஒவ்வாமைகள் இருந்தனவா எனபதைக் கண்டறிவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இதனையடுத்து, சுகாதாரப்பரிசோதகர்கள் அடங்கிய ஒரு குழுவினர் நேற்று கல்வியியற்கல்லூரிக்குச் சென்று அங்குள்ள குடிதண்ணீர் கிணற்றிலிருந்து பரிசோதனைக்காக மாதிரி அளவு நீரை எடுத்துச்சென்றனர்.

அத்துடன், கல்லூரி வளாகத்தில மேற்படி நோய்கள் பரவுவதற்கான வேறு காரணங்கள் இருக்கின்றனவா என்பது குறித்தும் ஆராய்ந்தனர். (ஜ-4-139)

## ஏ-9 வீதியூடாக தபால் பொதிகள் வவுனியா சென்றன

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ். பிரதம தபாலகத்தில் தேங்கிக்கிடந்த தபால் பொதிகள் உட்பட 150 பொதிகள் நேற்று புதன் கிழமை ஏ-9 வீதியூடாக வவுனியாவுக்கு எடுத்துச்செல்லப்பட்டன என தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-6)

# நம்பிக்கைகள்தான் வாழ்வுக்கு ஆதாரம் உழவர்களின் உழைப்புக்கு நன்றி!

தை மாதத்தில் இந்த நாட்டில் தற்போது தேக்கமடைந்துள்ள அரசியல செயற்பாடுகள் துரிதமாக சுறுசுறுப்படைய புதுப்பாதைகள் திறக்கும் என்று ஆழமாக நம்புகின்றேன். நம்பிக்கைகள் தான் வாழ்வுக்கு ஆதாரம் என்பது வெளிப்படையானது என்று தெரிவித்துள்ளார் ஈ.பி.டி.பி. அமைப்பின் செயலாளர் நாயகம் டே.என்.டக்ளஸ் தேவானந்தா.

தை முதலாம் நாள் தமிழர்களுக்கு ஒரு திருநாள். உழுதுண்டு வாழ்வதையே பெருமையான தொழிலாகக் கொண்டிருக்கும் உழவர் பெருமக்கள் தத்தம் வயல்களைச் செழுமைப்படுத்த மழை பொழியும் சூரியனுக்கு பொங்கலிட்டு நன்றி தெரிவிக்கும் நன்நாள். சேற்றில் கால்பதித்து நிற்கும் உழவர்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடும் இத் திருநாளில் அவர்களது உழைப்புக்கு நன்றி பாராட்டும் வகையில் வாழ்த்துக்கள் தெரிவிப்பது எம் ஒவ்வொருவரதும் கடமை ஆகும் - என்றும் அவர் கூறியுள்ளார். (ம)



வங்கக் கடலில் வீரச்சாவடைந்த கேணல் கிட்டு உட்பட பத்து வேங்கைகளின் நினைவாக தீருவில் புனிதத்திடலில் நிறுவப்பட்டிருந்த நினைவுக்கல். அருகே இம்முறை புதிதாக அமைக்கப்பட்ட நினைவுக் கல்லைப் படத்தில் காணலாம்.

(படம்: கரவெட்டி செய்தியாளர்)

## பொங்கல் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜன.15

சித்தங்கேணி ஸ்ரீநாக கன்னியம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழாவும், தமிழ்ப்பு வைபவமும் இன்று காலை 8 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர் கந்த சத்தியதாசனும், சைவப புலவர் நித்தியதசீதரனும் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்துவர். (ம-ரி-135)

★ ★ ★

வடமராட்சி,ஜன.15

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் கோவிலில் இன்று வியாழக்கிழமை தைப்பொங்கல் உற்சவம் சிறப்பாக நடைபெறும். (ம-173)

★ ★ ★

யாழ்ப்பாண்,ஜன.15

சுன்னாகம் வாழ்வக இல்லத்துடன் இணைந்து இனிய இதயங்களின் அமைப்பு பொங்கல் தினத்தை முன்னிட்டு நடத்தும் இனிய மாலைப் பொழுது இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் வாழ்வக இல்லத்தில் நடைபெறும்.

இனிய இதயங்கள் அமைப்பின் தலைவர் சி.விக்னராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். வாழ்வக மாணவர்களின் கலை நிகழ்வுகளும், சி.சிவகுமாரின் மெல்லிசையும் இடம்பெறும். (ம-ரி)

★ ★ ★

வடமராட்சி,ஜன.15

தொண்டைமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் கோவிலில் இன்று வியாழக்கிழமை தைப்பொங்கல் உற்சவம் இடம்பெறும் இதையொட்டி விசேட பொங்கல் பூஜை என்பன இடம்பெறும். (ம-173)

★ ★ ★

தெல்லிப்பழை,ஜன.15

இளவாலை திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல்விழா இன்று மாலை 7 மணிக்கு இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி வளாகத்தில் மன்றத் தலைவர் சி.செந்தூரன் தலைமையில் நடைபெறவுள்ளது. பிரதம விருந்தினராக ஹென்றியரசர் கல்லூரியின் பிரதி அதிபர் பொ.சிவகுருநாதனும் சிறப்பு விருந்தினராக இளவாலை உபதபாலதிபர் நநவரத்தினராசாவும் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-150)

★ ★ ★

தெல்லிப்பழை,ஜன.15

மல்லாகம் சுவாமி ஞானப்பிரகாசர் மன்றம் நடத்தும் பொங்கல் விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு மன்ற வளாகத்தில் தலைவர் அகோரநாத் தலைமையில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச சபை செயலாளர் க.வைரமுத்து கலந்துகொள்வார். (ம-150)

★ ★ ★

இணுவில்,ஜன.15

கோண்டாவில் வடக்கு ஸ்ரீ வாகீஸ்வரி சனசமூக நிலையத்தினரின் பொங்கல் விழா இன்று காலை 10 மணியளவில் நிலையத் தலைவர் செ.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-49)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.15

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் உழவர் விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு சின்னச்சுதா விளையாட்டரங்கில் இடம்பெறவுள்ளது.

கழகத் தலைவர் க.கமலநாதன தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன், வலி.மேற்கு பிரதேச செயலா சி.ஏ.மோகன்ராஜ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக யாழ்.மாவட்ட துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் செம்மணன், யாழ்.மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் மதுளன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

கைக்கொடி மாட்டுச்சவாரி, சிறுவர் நிகழ்ச்சிகள், பெண்களுக்கான சங்கீதக் கதிரை, மெதுவான சைக்கிளோட்டம், வயோதிபருக்கான வேக நடை, கயிறு இழுத்தல் மற்றும் உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ம-5)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜன.15

ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பணிமனையின் நலன்புரிச் சங்கம் ஏற்பாடு செய்துள்ள பொங்கல் விழா நிகழ்வுகள் தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறை உதவி அரச அதிபா ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நாளை வெள்ளிக்கிழமை காலை 11 மணியளவில் நடைபெறும்.

# தைப்பொங்கல் வாழ்த்துக்கள்

## அமைதி இனியும் தாமதிக்கக் கூடாது

நிரந்தரமான அரசியல் தீர்வும் அமைதியும் இனியும் தாமதிக்கக் கூடாது என்று அகில இலங்கை இந்துமாமன்றம் தனது பொங்கல் செய்தியில் வலியுறுத்தி உள்ளது.

அமைப்பின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்த நாட்டின் இந்து நிறுவனங்களினதும் அறக்கட்டளைகளினதும் கூட்டமைப்பான அகில இலங்கை இந்து மாமன்றம் கடந்த ஆண்டு பொங்கல் அன்று வெளியிட்ட செய்தியில் இரண்டு தசாப்தங்களுக்குப் பின் சமாதான சூழல் விடிந்திருப்பதாகத் திருப்தி தெரிவித்திருந்தோம். இன்று அந்த சமாதான நிலைமை தொடர்ந்தும் பேணப்படுமா என வினவப்பட வேண்டியிருக்கின்றது.

ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக மத்தியில் நிலவும் ஆட்சிப் பதவிப் போட்டியினால் தமிழ்பேசும் மக்கள் தாக்கப்பட்டு சோதனைகளையும், வேதனைகளையும் எதிர்நோக்க வேண்டிய நிலையில் இருந்தனர். மத்திய ஆட்சியைக் கைப்பற்றுவதிலும் நிலைப்படுத்துவதிலும் மட்டும் நாட்டம் கொண்டிருந்த அரசியல்வாதிகள் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகளையும் வேதனைகளையும் தங்கள் இலாபத்திற்கும் பாவித்து உயர்ந்து வந்திருக்கிறார்கள்.

இந்த துர்ப்பாக்கிய நிலை மேலும் தொடரமாட்டாது என்ற நம்பிக்கையை கடந்த வருடப் பொங்கல் செய்தியில் வெளியிட்டிருந்தோம். ஆனால் மேலும் தொடர்ந்தும் மத்தியில் நிலவும் அரசியல் போராட்டத்தால் நாங்கள் ஏமாற்றப்பட்டு துயரநிலையிலேயே வாழ்ந்துகொண்டிருப்பதா? என்று எங்கள் மக்கள் இன்று கவலையுடன் வினவ வேண்டியநிலை ஏற்பட்டு இருக்கின்றது.

பெரும்பாலும் தமிழ்பேசும் மக்களாகிய இந்து மக்கள் இன்று தைப்பொங்கலைக் கொண்டாடுவதில் அக்கறையுடன் இல்லை என்பதனை மாண்புமிகு ஜனாதிபதியும் மாண்புமிகு பிரதமரும் உணரவேண்டும். ஆனால், மக்கள் என்றும் நிலைக்கும் நிரந்தரமான அரசியல் தீர்வையும் அதன் பலனாக அமைதியையும் எதிர்பார்க்கிறார்கள். அது மேலும் தாமதிக்கப்படக் கூடாது; மறுக்கப்படக்கூடாது என்பதையும் வலியுறுத்திக் கூற விரும்புகின்றோம்.

அப்படியான மகிழ்வான நிரந்தரமான நிலைமை உருவாக அருளுமாறு ஸ்ரீசிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானை வேண்டி இப்புனித நாளில் பிரார்த்திக்கின்றோம். அப்போது தான் எங்கள் மக்கள் தங்கள் வாழ்வில் சூரியப் பிரகாசத்தைக் காணமுடியும்.

அதே சமயம் இந்நாட்டிலும் உலகின் ஏனைய பாகங்களிலும் வாழும் (ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள் உட்பட) இந்துமக்களை, நிதியுதவியும் ஏனைய தேவையான உதவிகளையும் எங்கள் சகோதர சகோதரிகளுக்குத் தாராளமாக செய்து உதவுமாறும் அவர்கள் ஏமாற்றப்பட்டு தவறான வழியில் மதமாற்றம் செய்யப்படுவதற்கு அனுமதிக்கக் கூடாது என்றும் வேண்டுகின்றோம்.

இந்து சமய விவகார அமைச்சர் மாண்புமிகு தி.மகேஸ்வரன் மத மாற்றத்தைத் தடைசெய்யும் சட்டத்தை நிறைவேற்ற முன்வந்ததை வரவேற்பதுடன் அந்தச் சட்டத்தைத் தாமதிக்காது நிறைவேற்ற வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.

இந்து - பௌத்த குழு ஒருநகல் சட்டத்தை தயாரித்து அரசாங்கத்துக்கு ஏற்கனவே சமர்ப்பித்துள்ளது. மதச் சுதந்திரத்திற்கு இச்சட்டத் தினால் எவ்வித பாதிப்பும் ஏற்படாது என்பதனையும் தவறான முறையில் பாமர ஏழை மக்கள் மதமாற்றம் செய்யப்படுவதை தடுப்பதே இச்சட்டத்தின் நோக்கம் என்பதையும் விளக்க விரும்புகின்றோம்.

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசி

இன்று தை பிறந்துவிட்டது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பார்கள். தமிழர் பண்டிகைகளில் மிகச் சிறப்பு வாய்ந்தது இன்றைய தைப்பொங்கல் திருநாள், இந்த ஆண்டில் புதுப்பொலிவோடு மிளிர்கின்றது. சந்தோஷமான சமாதான நல்வாழ்வுக்காக தன்னம்பிக்கையோடு எதிர்பார்த்துக் காத்திருக்கும் தமிழ் மக்களுக்கு இது ஒரு பொன்னாள்; இனிய நன்னாள் என்று தனது வாழ்த்துச் செய்தியில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரியர் தெரிவித்துள்ளார்.

இற்றைநாள் வரைபட்ட துன்பங்கள், துயரங்கள் அகன்று, இன்னல்கள், இடுக்கண்கள் நீங்கி சுபிட்சமான சுகவாழ்வுக்கு வழிகோலுமாப்போல் கதிரவன் சமாதான நல்வாழ்வுக்கான நம்பிக்கைக் கீற்றுடன் கதிர்களைப் பரப்பிய வண்ணம் கிழக்கு வானிலே எழுந்துவிட்டான்.

எல்லோரும் எதிர்பார்த்திருக்கின்ற மகிழ்ச்சி நிறைந்த மாண்புமிக்க மனோரம்மியமான - நல்வாழ்வு ஈழம் வாழ்மக்கள் அனைவருக்கும் கிடைக்கவேண்டுமென்று நல்லைக் குருமணியின் பாதகமலங்களைப் பணிந்து. உளமாரப் பிரார்த்தித்து எல்லாம் வல்ல நல்லூர் கந்தனின் பேரருட் கருணையை வேண்டி நல்லாசிகளை வழங்குகின்றோம்.

இன்றைய பொங்கல் மகிழ்ச்சி பொங்க, உவகை பொங்க, இன்பம் பொங்க, சுபிட்சம் பொங்க, மங்களம் பொங்க அனைவருக்கும் ஆனந்தத்தை அள்ளிச் சொரிய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

## நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வு தைத்திருநாளில் கிடைக்கட்டும்!

நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வையும் அமைதியோடு கூடிய சமாதான வாழ்வையும் தரும் புனிதத்திருநாளாகப் பொங்கல் திருநாள்.விளங்கட்டும் என்று சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

2004ஆம் ஆண்டின் தைப்பொங்கல் திருநாளான இந்நன்னாளிலே தமிழ் மக்களின், மனங்களிலும் இன்பங்கள் பொங்க அனைத்து தமிழ் மக்களுக்கும் எமது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் அகமகிழ்கின்றோம்.

உழவர் திருநாளான இத்தைத்திருநாளிலே கதிரவனை வழிபடுவோம். இறையருளால் இவ்வையகம் இனிதே சிறக்க பல்லுயிரும் பாரினில் பசி இன்றி வாழ மனித இனம் மாசற்ற இனமாக மலர்ந்திடட்டும். எமது மண்ணில் நிரந்தர சமாதானம் நிலைபெற்று பழையன கழிந்து புதியன புகுந்து நீதியோடு கூடிய நிரந்தரத் தீர்வையும், அமைதியோடு கூடிய சமாதான வாழ்வையும் தரும் புனிதத்திருநாளாக இப்பொங்கல் திருநாள் மலர வேண்டும்.

தைத்திருநாள் இன்பம் தரும் நாளாக மட்டும் நின்றுவிடாது அரசியல், சமூக பொருளாதார ரீதியில் தமிழினம் செழித்தோங்கட்டும். ஈழத் திருநாட்டில் பலதரப்பட்ட வளங்களும் நிலைகொள்ள நிலையான தேசத்தை வளர்த்து, இயற்கை எழில் கொஞ்சும் இலங்கைத் தீவை அனைவரும் நேசிக்க ஒவ்வொரு மனிதனும் தம் இதயக் கதவுகளை இவ் இனிய நாள்தனிலே அகலத் திறந்து வைப்போம். கடந்த காலங்களில் நாம் கசப்புடன்பெற்ற அனுபவங்களை மறந்து இனிப்பான சர்க்கரைப் பொங்கலுடன் இனிப்பான செயல்களை செய்திருப்போம் என திடசங்கற்பம் கொள்வோம்.

பாடுபட்டுத் தேடிய பணத்தைப் பதுக்கி வைக்காது பரிதவிப்போருக்காகவும், போரில் அழிவுபட்ட எம் இனிய தேசத்தைக் கட்டியெழுப்புவதற்காகவும், போரிலே தமது உறவுகளை இழந்து உணவு, உடை, உறையுள் இன்றித் தவிக்கும் இதயங்களுக்காகவும் செலவிடுவோம். பாசம் காட்டும் பண்பை வளர்க்க இளைய தலைமுறையினரே எம் தேசம் இனி உங்கள் கைகளில் அல்லவா? ஆகவே இளைய தலைமுறையினரே நீங்கள்தான் இத்தேசத்தை கட்டியெழுப்ப வேண்டும். அதற்காய் முன்வாருங்கள் இந்நன்னாளில்.

உண்மையான சமாதானத்தை உலகினில் நிறுவ நீதியானது அன்பினால் கட்டுப்படவேண்டும். ஒவ்வொரு மனிதனும் தத்தம் உரிமைகளைப்பெற்று அறவழியில் நடக்க வேண்டும். நடந்த பாதைகள் முட்களாக இருந்தாலும் இனி நடக்கும் பாதைகளை மலர்களினால் அமைப்பது எமது வருங்கால சந்ததியினருக்கு நாம் செய்யப்போகும் உதவியாக இருக்கட்டும்.

## தமிழர் ஒற்றுமையைக் காட்ட இந்நாளில் சபதம் பூணவேண்டும்!

தமிழ் மக்கள் தமது ஒற்றுமையையும் ஆன்மீக பலத்தையும் உலகுக்குக்காட்ட சபதம் பூணவேண்டும் என்று தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் அறைகூவல் விடுத்துள்ளார் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன்.

அவரது செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பண்டுதொட்டு தமிழ் மக்கள் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற வாஞ்சையோடு பொங்கல் திருநாளை எதிர்கொண்டு சுற்றம் சூழ கொண்டாடி மகிழ்வார்கள். ஆயின் ஈழத் தமிழ் மக்கள் கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக தமது ஜீவாதார உரிமைகளை இழந்து அவற்றை மீண்டும் பெறுவதற்காக அளப்பரிய தியாகங்களைச் செய்து அவற்றுக்காக ஏங்கி நிற்கிறார்கள். ஆண்டுதோறும் தமது வாழ்வில் விடிவெள்ளி தோன்றாதா? என எதிர்பார்த்துள்ளனர்.

எமது மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க இலங்கை நாட்டின் அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இன்று தடங்கல் ஏற்பட்டுள்ளது. இதற்கு மேதகு ஜனாதிபதியும் அவரின் பின்னால் அணிதிரண்டுள்ள ஆலோசகர்களும் நாட்டுக்கும் உலகிற்கும் பதில் சொல்லியேயாக வேண்டும்.

சுதந்திர இலங்கையில் ஏனைய மக்களுடன் சரிசமமாக வாழவும், அரசாங்கத்தில் தமக்குரிய பங்கை செலுத்தவும் உரிமையுடையவர்கள் எமது மக்கள். இதனை மறுப்பது ஜனநாயகத்துக்கும் அரசியல் பண்புகளுக்கும் முற்றிலும் விரோதமானது.

இன்றைய பொங்கல் திருநாளில் தமிழ்மக்கள் தமது ஒற்றுமையையும் ஆன்மீக பலத்தையும் உலகுக்காட்ட சபதம் பூணவேண்டும். அதன்மூலம் எமது உரிமைகளை வென்றெடுக்க வழிகாண வேண்டும். தைப்பொங்கல் திருநாளில் எல்லாத் தமிழ் மக்களுக்கும் இறைவன் கருணைகூர்ந்து இன்புற்றிருக்க அருள் புரிவானாக! அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்.

## தைத்திருநாள் வழிவகுக்கட்டும்

எம்மக்களுக்குத் தேவையானதை ஆட்சியாளரும் எதிர்த்தரப்பினரும் இணைந்து நிறைவேற்ற தைத்திருநாள் வழிவகுக்கட்டும் என்று வாழ்த்துத் தெரிவித்துள்ளார் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. வி.ஆனந்தசங்கரி.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தான் வாழும் போதே வாழ்ந்து பிறரையும் வாழ வைத்து அதைக்கண்டு களித்தவன் தமிழன். அத்தகைய பெருமையினையுடைய எமது தமிழர்களின் பெருவிழாவான தைப்பொங்கல் திருநாளான இன்று (15-01-2004) எனது மனமார்ந்த வாழ்த்தினை உங்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

எமது மக்கள் தமது சொந்தமண்ணில் வியர்வை சிந்த உழைத்து, அதன் பயனை பெருவிழாவாக கொண்டாடுவதே இன்றைய திருநாளின் சிறப்பு அம்சமாகும். ஆனால், எம்மக்களின் அநேகருக்கு சொந்த மண்ணும் இல்லை, அந்த மண்ணுக்குரிய தமது சொந்தங்களுமில்லை.

இடம்பெயர்ந்த மக்கள் அனைவரும் தமது சொந்த மண்ணில் வியர்வை சிந்த உழைத்து, உள்ளத்திலும், இல்லத்திலும் மகிழ்ச்சி பொங்க தங்கள் முற்றத்தில் வைத்துப் பொங்கிய பானையிலும் 'பொங்கலோ பொங்கல்' என பொங்கலும் பொங்க முகம் மலர்ந்து கொண்டாடும் தினமே உண்மையான பொங்கல் தினமாகும். அந்தத் திருநாள் எப்போது வரும் என ஏங்கித் தவிக்கும் எம்மக்களின் மனதில் மகிழ்ச்சி பொங்க, ஆட்சியாளரும் எதிர்த்தரப்பினரும் ஒன்று சேர்ந்து, காலதாமதத்தை தவிர்த்து எமது மக்களுக்கு என்ன தேவை என்பது எல்லோருக்கும் எப்போதோ தெரியும் என்பதால் அதை நிறைவேற்ற இந்தத் திருநாள் வழிவகுக்கட்டும்.

## சமாதான முன்னெடுப்புகளில் இந்துக்களின் பங்களிப்பு அளப்பரியது

### தைப்பொங்கல் செய்தியில் பிரதமர்

கொழும்பு,ஜன.15

சமாதான முன்னெடுப்புகளில் இந்துக்களின் பங்களிப்பு அளப்பரியதாகும்.

- இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தைப்பொங்கல் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜனவரி மாதத்தின் பிறப்பை உலக வாழ் இந்து மக்கள் சிறப்பாக கொண்டாடுவதுடன் அதனை சுபீட்சம், மகிழ்ச்சி, அதிர்ஷ்டம் ஆகியவற்றை அடைவதற்கான நற்சகுனமாகவும் கருதுகின்றனர். தைப்பொங்கல் புதியதொரு காலப்பருவத்தின் ஆரம் பத்தையும் அறுவடை விழாவின் ஆரம்பத்தையும் குறிக்கின்றது. இந்து மக்கள் தமது இல்லங்களில் சூரிய பகவானுக்கு பொங்கலிடுவது தைப்பொங்கலின் சிறப்பம்சமாகும்.

தைப்பொங்கல் என்பது விவசாயிகள் தமது வாழ்வாதாரத்துக்கு துணைபுரிந்த அனைவருக்கும் நன்றிக்கடன் செலுத்தும் ஒரு விழாவுமாகும். இக்கொண்டாட்டங்களில் பரஸ்பர கௌரவம் மற்றும் சமத்துவம் போன்ற உயரிய நெறிகளும் அடங்கியுள்ளன.

ரிக் வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதைப்போன்று சமாதானம், சுதந்திரம் மற்றும் ஒற்றுமையின் பிரதிபலனாக சுபீட்சத்தை அடையலாம். வெற்றிகொள்ள வேண்டிய தடைகள் பல இருப்பினும் கூட இந்த அரசாங்கம் ஆரம்பித்த சமாதான முன்னெடுப்புகள் எம்மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. இம்முன்னெடுப்புக்களில் எமது மக்கள் குறிப்பாக இந்துக்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். மக்கள் தெளிவான சிந்தனையுடன் செயற்படுவது தேசிய ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கும் பரஸ்பர புரிந்துணர்வை வளர்ப்பதற்கும் வழிகோலியுள்ளது.

அனைத்து சமூகங்களுக்கிடையேயும் நட்புறவை வளர்ப்பதற்கும், நல்லெண்ணம் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வை கட்டியெழுப்புவதற்கும் இத்திருநாளில் திடசங்கற்பம் பூணுவோம்.

இத்தைத்திருநாள் அனைவருக்கும் மகிழ்ச்சிகரமானதாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன். (ம-8)

## நல்லதே நடக்கும் என்று நன்றே எண்ணுங்கள்!

நாட்டில் நல்லதே நடக்கும் என்று நன்றே எண்ணுங்கள். நலம் தரும் தைத்திருநாள் நமக்கு வழிகாட்டும் என்று தெரிவித்துள்ளார் செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன்.

அவரது பொங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

*பாடுபட்டு உழைப்பவர்களுக்கே இப்*
*பாரிடம் சொந்தமையா*
*காடு திருத்தி நாடு காண்பவர் அவரெல்லவோ....*

.... என்ற கவிமணி தேசிக விநாயகம்பிள்ளையின் பாவரிகளுக்கு அமைய பாடுபட்டு உழைக்கும் உழவர் பெருமக்களின் உன்னத திருநாள் தைப்பொங்கல்.

இத்திருநாளில் அன்னப்பசி போக்கும் உழவர்களையும் அகல வெளிச்சம் தரும் ஆதவனையும் நன்றியோடு வணங்கி வாழ்த்துவது தமிழர் தம் பண்பாட்டுப் பாரம்பரியமாகும். நன்றிக்கும் வழிபாட்டுக்குமுரிய நண்ணாளிலே அனைவரும் உலக அமைதிக்காக பிரார்த்தனை செய்வோம்.

உலகில் வாழும் மக்கள் அனைவரும் உணவு, உடை, உறையுள் பெற்று சீரிய வாழ்வு வாழ புனித பொங்கல் நாளில் வந்தனை செய்வோம். எங்கள் தாய்த்திருநாட்டில் அன்பும் பண்பும் அனைவரது உள்ளத்திலும் பொங்கி எழுந்து நிரந்தர சமாதானத்துடன் ஒன்றுபட்டு வாழக்கண்கண்ட தெய்வமாக நித்தமும் மலரும் சூரியபகவானை இறைஞ்சுவோம்.

அன்பர்களே! தை பிறந்தால் வழி பிறக்கும், கவலைகளை மறந்து கருணையோடு எழுந்து கடவுளை வேண்டிக் கடமைகளைத் தொடருங்கள். நாட்டில் நல்லதே நடக்கும் என்று நன்றே எண்ணுங்கள். நலம் தரும் தைத்திருநாள் நமக்கு வழிகாட்டும். இனிய உறவுகள், நண்பர்கள் அனைவரின் நட்பையும் இத்திருநாளில் மேலும் அரவணைத்து அகமகிழ்ந்து வாழ்வோமாக.

## சுதந்திரமாகப் பொங்கிடுவோம்

பேரினவாத ஆக்கிரமிப்பாளரிடம் இருந்து தமிழ்த் தேசத்தை மீட்டு சுதந்திர ஆட்சி செய்வோம் எனப் பொங்கல் திருநாளில் உறுதி ஏற்று சுதந்திரமாய்ப் பொங்கிடுவோம்.

- இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழ்க் கூட்டமைப்பு எம்.பி. மாவை சேனாதிராஜா.

அவரது செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

உழைத்து வாழவேண்டும், அதற்கு உறுதுணையாக இருப்பவற்றிற்கும் நன்றி தெரிவிக்கவேண்டும் என்ற பண்பட்ட பொதுமை உணர்ச்சியே தைத்திருநாளுக்கு அர்த்தத்தைக் கொடுக்கிறது. தமிழர் தம் உழைப்பை, அர்ப்பணிப்பைப் பெருமைப்படுத்துகின்றனர் என்பது மட்டுமல்ல அதன் விளைச்சலையும் அதற்கு உறுதுணையாயுள்ள சூரியனுக்கும், மாட்டுச் செல்வத்திற்கும், நிலத்திற்கும், நீருக்கும் கூட நன்றி செலுத்துகின்றனர் என்பது தமிழர் பண்பியலின், உயர் நாகரிகத்தின் வெளிப்பாடேயாகும். தைப்பொங்கல் இவ்வுயர் நாகரிகத்தினை உலகிற்கு எடுத்தியம்புகிறது.

இருப்பினும் ஓயுதல் செய்யோம் - தலைசாயுதல் செய்யோம் என எழுந்து பேரினவாத ஆக்கிரமிப்பாளரிடமிருந்து தமிழ்த் தேசத்தை மீட்டுச் சுதந்திர ஆட்சி செய்வோம் என பொங்கல் திருநாளில் உறுதிஏற்று சுதந்திரமாய் பொங்கிடுவோம் என அழைத்து அனைவரையும் வாழ்த்தி நிற்கின்றேன்.

## ஒற்றுமை தொடர வேண்டும்!

தமிழர்கள், மேல்மாகாணத்தில் வாழ்வோர், வடக்கு - கிழக்கில் வாழ்வோர் இந்தியர்கள் என்ற பேதங்களின்றி இன்றைய பொங்கல் விழாவினைக்கொண்டாடி மகிழவேண்டும். அந்த ஒற்றுமை தொடரவேண்டும்.

இலங்கையின் இருபெரும் தலைவர்களான ஜனாதிபதியும் பிரதமரும் இன்றைய பொங்கல் விழாவினை முறையே கொழும்பிலும் நுவரெலியாவிலும் கொண்டாடுகிறார்கள். இருதலைவர்களிலும் காணப்படும் இந்த ஒற்றுமை தமிழ்பேசும் சிறுபான்மை இனமக்களின் இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்த்து வைக்கவும் முன்வரவேண்டும் என்பதே இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும்மக்கள் அனைவரினதும் இன்றைய பிரார்த்தனையாகும்.

இனவாதம் பேசும் சில தலைவர்கள், இந்நாட்டில் வாழும் அனைத்து இனமத மொழிமக்களும் சமாதானமாக வாழ வழிவிடவேண்டும். இவர்களின் மனங்கள் திருநத வேண்டும் என்பது நாட்டில் சமாதானத்தை விரும்பும் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

மேல்மாகாணத்தில் வாழும் மக்கள் மலையகம், வடக்கு - கிழக்கு, இந்தியத் தமிழர் என்ற பேதங்களின்றி இன்றைய பொங்கல் விழாவினைக் கொண்டாடி மகிழவேண்டும். அந்த ஒற்றுமை தொடரவேண்டும் என்பதே மேல் மாகாண மக்கள் முன்னணியின் பிரார்த்தனை.

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

52-ஐ தொடரிலக்கமாகக் கொண்ட ஹயஸ் டொல்பின் வான் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு: க.யோகேந்திரநாதன் உடையார் ஒழுங்கை, நெல்லண்டை, தும்பளை, பருத்தித்துறை. T.P.: 0777 240768. (27156)

### காணி விற்பனைக்கு

பெரிய கடை, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்த 3 பரப்பும் 12 குழியுமுடைய காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 142, இராசாவின் தோட்ட வீதி, யாழ்ப்பாணம் (முன்னர் மீன் வியாபாரம் நடைபெற்ற இடம்). (27132)

### திருமண சேவை

1971, அனுசம், செவ்வாயற்ற, கிரகபாவம் கூடிய, கௌரவ குடும்பம், **U.K. Engineer** இற்கு அழகிய **Professional** பட்டதாரி மணப்பெண் தேவை. விரைவில் வரவுள்ளார். தொடர்பு: துரை விமலா, இலகு திருமணசேவை, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம.(27057)

எம்மிடம் சகல மதத்திலும், எந்தக் குலத்தினருக்கும் ஏற்ற உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் உள்ளன. உடனுக்குடன் ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: **S.T.R.** திருமண சேவை (பிரதேச செயலகம் முன்பாக) சண்டிலிப்பாய். (27172)

### மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், வயது 29, இத்தாலி **P.R** உள்ள செவவாய்க்குற்றமுள்ள மணமகனுக்கும், அரச உத்தியோகம், வயது27, திருவாதிரை, தனியார்துறை (வயது 28), திருவாதிரை மணமகன்களுக்கும் மணமகள் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்புகொள்க. "புதிய பாலம்",த.பெ.இல.10, வவுனியா. (26545)

### கார் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள **Toyota Corona** (14ஸ்ரீ ) ரக கார் விற்பனைககுண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி சி.மகாலிங்கம், மலையந்தோட்டம், கொற்றாவத்தை, வல்வெட்டித்துறை. தொலைபேசி இலக்கம் 021 - 226-3634. (27168)

### O/L கணிதம்

A,B பெறுபேறடைவதற்காக 39 வருட அனுபவமுடைய ஆசிரியரினால ஆரம்ப அறிவிலிருந்து சகல அலகுகளும் கற்பிக்கப்பட்டு மீட்டலுடன் வினா விடை வகுப்புகளும் 40 மணித்தியாலங்களில் நிறைவேற்றப்படும். சந்திக்கும் நேரம் காலை 6.00 - 9.00மணி தொடர்பு: க.ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம். (27111)

### தவறிவிட்டது

திரு.பிலேந்திரன் எமில்ராஜ் என்பவரின் தேசிய அடையாள அட்டை (821284562V) 06-01-2004 காலையில் கச்சேரிக்கு அருகில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 19/1, ஈச்சமோட்டை கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் தொ.பே. இலக்கம் 0776175722.

(27169)

புனித மருதனார் குருமடத்திற்கு முன்பாக பிரதான வீதியில் அமைந்த தற்காலிக பஸ்தரிப்பு நிலையத்தில் திரு.எஸ்லிம் என்பவரின் உடுப்புப் பார்சல், டெக் இவற்றைத் தவறவிட்டு விட்டார். இதனைக் கண்டெடுத்தவர்கள் யாழ்பிரதான வீதியிலுள்ள புனித மருதனார் குருமடத்தில் ஒப்படைத்துதவவும்.

(27151)

### வீடு வாடகைக்கு/ விற்பனைக்கு

நல்லூர் கோவில் வீதி, யாழ்ப்பாணத்தில் 5 அறைகள், 3 குளியலறைகள், வாகனங்கள் தரிப்பதற்கான வசதியுடன் நவீன பெரிய வீடு வாடகைக்கு அல்லது விற்பனைக்குண்டு. தொடர்பு: 2 - 386699 (சி-32786)

### கோழிக்குஞ்சு விநியோகம்

ஒரு நாள் வளர்ச்சியடைந்த பகிரா இன புறொயிலர் குஞ்சுகள் விறபனைக்குண்டு. தேவைப்படுவோர் உடன் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டை சந்தி. T.P.: 222 3529 222 2867(27161)

### தபால்மூலம் சிங்களம்

இப்போது நீங்களும் வீட்டில் இருந்தபடியே சிங்கள மொழியைப் படித்து எழுத/வாசிக்க/பேச தேர்ச்சி பெறலாம். வழமையான நேரடி வகுப்புகளுமுண்டு. விவரங்களுக்கு: ஆசிரியர் திரு.மல்வான, இலக்கம் 56, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (27099)

### இலவச மருத்துவமுகாம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் மீசாலைப் பகுதி மக்களுக்காக நடததும் இலவச மருத்துவ பரிசோதனை முகாம் எதிர்வரும் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயத்தில் இடம்பெறும்.

கண், இரத்த அழுத்தம், சலரோகம், வாய்ப்புற்று, தொழுநோய், பொதுமருததுவம் ஆகிய பரிசோதனைகள் நடததப்படவுள்ளன என்று கழகச் செயலாளர் லயன் கா.சற்குணதேவன் தெரிவித்தார். (ம-117)

### ஆன்மீகச் சொற்பொழிவு

இந்து கலாசார அமைச்சின் யாழ்.மாவட்டப் பிராந்திய அலுவலகம் நடத்தும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் நாளை மாலை 5.30 மணிக்கு நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி ஆசிரியர் சைவப் புலவர் கா.கமலநாதன் 'திருவாசகத்தேன்'என்னும் தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்துவார். (எரி)


## மக்ஷல் கவுஸ்

புது வருடத்தில் புதுப் பொலிவுடன் வாடிக்கையாளர் நன்மை கருதி விஷேட விலைக்கழிவில் புகைப்பட உபகரணங்கள், பிலிம் **(Film)** வகைகள் மற்றும் போட்டோக் கொப்பி இயந்திரத்திற்குரிய உதிரிப்பாகங்கள், அதற்குரிய ரோணர் **(Toner)** வகைகளைப் பெற்றுக்கொள்ள மக்ஷல் கவுஸ். வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது தைப் பொங்கல் வாழ்த்துக்கள்.

**Mobil= 0777222641**
**0777222642**

20, யுபிலி பஜார்,
யாழ்ப்பாணம்.

(27178)(36-17-16)


## இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் திருக்கோயில்
## நாதஸ்வர கானமழை

தென்னிந்திய திருமானம் கோயில்
நாதஸ்வர கலைஞர்களின் நாதஸ்வர இசை

தமிழ்நாடு
நாதஸ்வர கலைஞர்கள்
T.S.பாண்டியன்
T.T.மாதவன்

தவில் கலைஞர்கள்
இணுவில் N.R.S. சுதாகரன்
பருத்தித்துறை S.சதீஸ்குமார்

இடம்: இணுவில் ஸ்ரீ பரராஜ சேகரப் பிள்ளையார் கல்யாண மண்டபம்.
காலம்: 15.01.2004 வியாழக்கிழமை மாலை 4 மணி.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

விளம்பர அன்பளிப்பு
**K.R.S. அன்கோ**
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

விநாயக அடியார்கள்
ஐங்கரன் டொட் கொம்
ஸ்ரீ பரராஜ சேகரப்பிள்ளையார்,
கோவிலடி, இணுவில்.

(சி-32791)

## வடபிராந்திய நிர்மாணிகள் சங்கம்
### யாழ்ப்பாண மாவட்டக்கிளை
### விசேட பொதுக் கூட்டம்

இடம்: யாழ்.வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்
காலம்: 17.01.2004 சனிக்கிழமை
நேரம்: பிற்பகல் 2.30 மணி

நிர்மாண ஒப்பந்தகாரர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை ஆராய்ந்து அதற்குரிய தீர்வை காண்பதற்கு தவறாது கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுன்கிறோம்.

(27179) - தலைவர்.

# மரண அறிவித்தல்கள்

### செல்வன் நடராஜா ஜனாகரன்

(யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி - தரம் 8 மாணவன்)

காரைநகர், முல்லைப்புலவைச் சேர்ந்த நடராஜா-மகேஸ்வரி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜனாகரன் (பழைய மாணவன், யாழ்ற்றன் கல்லூரி) 12-01-2004 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செந்தூரன் மற்றும் திவாகரன் (யாழ்.பல்கலைக் கழகம், புவியியற்றுறை), செல்வக்குமரன், இராஜேஸ்வரன் (காரைநகர், தியாகராஜா ம.வி.), கஜபரன் (காரைநகர், யாழ்ற்றன் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சட்டத்தரணி திரு. திருமதி சு.கந்தையா, நா.க.ஆறுமுகம் செல்லாச்சி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் காரைநகர் சாம்பலோடை மயானத்தில நேற்றுமுன்தினம் (13-01-2004) செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'செந்தூரன்ஸ்'*
*முல்லைப்புலவு,*
*காரைநகர்.*

(27173)(21-23-19-18)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி அல்பேட் ஞானம்மா

(ஓய்வுபெற்ற ஆசிரியை - நாவாந்துறை)

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் நாவாந்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அல்பேட் ஞானம்மா நேற்று (14-01-2004) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற திருச்செல்வம் அல்பேட் அவர்களின் அன்பு மனைவியும் அன்ரன் அருள்ராஜ், யூஜின் ரவி ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இன்று (15-01-2004) வியாழக்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் நாவாந்துறை புனித நீக்கிலார் ஆலயத தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்திற்காக நாவாந்துறை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*27,கோவில் ஒழுங்கை,*
*நாவாந்துறை,*
*யாழ்ப்பாணம்.*

(27174)(21-19-18)

தகவல்:
யூஜின் ரவி அஞ்சலா
குடும்பம்.


அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் இனிக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

**One** Coat Of
**PLUS**
gives you a whole lot more



**Dulux Pentalite Plus**
A little Paint goes a longer way

**சிவன் மோட்டார் ஸ்ரோர்ஸ்**
70/1, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்
☎ 021 2763

(சி-32556) (21-19-18-26)



தமிழர் திருநாளாம் இப்பொங்கல் நன்நாளில்
மாணவ, மாணவியர், பெற்றோர்கள் மற்றும்
அனைவருக்கும் எமது உளங்கனிந்த
**தைப்பொங்கல் நல்வாழ்த்துக்களை**
தெரிவித்துக்கொள்கிறோம்.



கொம்ப்யூட்டர் பாடநெறிகளுக்கான
புதிய டிப்ளோமா பிரிவுகள் ஜனவரி 18 முதல் ஆரம்பம்

**ASIAN COMPUTER SYSTEMS**

| | | |
|---|---|---|
| இல :2 G,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ✆ 021-222 5677 | PRASHANNAA COMPUTERS STUDY CENTRE 108,K.K.S. வீதி, சுன்னாகம். ✆ 071-2501589 | கொடிகாமம் வீதி, நெல்லியடி. (கரவெட்டி தபாலகத்துக்கு முன்பாக) ✆ 0777-878160 |



**கணனியில் பூரண அறிவைப் பெறவேண்டுமா?**

சர்வதேச அங்கீகாரம்!
அரச சான்றிதழ் !!
தொழில் வாய்ப்புக்கான வழிகாட்டல் !!!

**மிக விரைவில்...** மருதனார்மடத்தில்

**eTouch COMPUTER SYSTEM**
"The right way to touch IT"

(சி-32729)(36)

உதயன்

## சிந்தனை பொங்கட்டும்!

இன்று தைப்பொங்கல்.

இது உழவர் திருநாள். உழைப்பவர் பெருநாள். உயர்வுக்கு வழிகாட்டும் உத்தமநாள். 'தமிழர் திருநாள்' என்றும் இதனைப் போற்றுவர்.

'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாரதி கூறிய வழியில் வாழ்பவர்கள் தமிழர்கள். அவர்கள் செய்நன்றி மிக்கவர்கள்.

உலக இயக்கத்துக்கு காரணன் சூரியன். அவனின்றி அவனியில் அணுவும் அசையாது. அவனுக்கு நன்றி செலுத்தவும் தங்கள் உயர்வாழ்வுக்கும் உழவுக்கும் உற்ற உதவி வழங்கும் ஆவினங்களைப் போற்றவும் தமிழர்கள் தேர்ந்தெடுத்த நன்னாள்களே பொங்கலும், மாட்டுப் பொங்கலுமாகும்.

புத்துணர்வும், புதுவாழ்வும், புத்தூக்கமும் தரும் காலமாகவும் பொங்கல் வேளை மிளிர்கின்றது. பழையன கழிதலும் புதியன புகுதலும் இக்காலத்தின் சிறப்பு எனக்கொள்வர்.

தமிழரின் வள்ளுவர் ஆண்டுக்கணக்கு தைப் பொங்கல் தினமான தைப்பிறப்புடன் தான் ஆரம்பமாகின்றது. எனவே, தமிழரின் புத்தாண்டுத் தொடக்கமாகவும் இதனைக் கணிக்கலாம்.

புதியன தோன்றும் இச்சுபவேளையை 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற பெருநம்பிக்கையோடு எதிர்கொள்வர் நம்மக்கள்.

ஈழத் தமிழரும்கூட இந்த நம்பிக்கையோடுதான் வருடம்தோறும் தைப்பிறப்பை ஆவலோடு எதிர்கொண்டனர்; எதிர்கொள்கின்றனர்.

ஆனால், அவர்கள் வாழ்க்கையில்தான் இன்னும் புதுவசந்தம் பிறக்கவில்லை; பழைய அவலம் கழியவில்லை; அல்லலும் தொல்லையும் நீங்கவில்லை; துன்பமும் துயரமும் தொடர்கதையாய் தொடர்கின்றன.

ஐந்து தசாப்தகால இனச்சிக்கலுக்கு - இரண்டு தசாப்தகால கொடூர இனப்போருக்கு - முடிவாக கௌரவத்துடனும் நீதியுடனும் கூடிய தீர்வுகிட்டும் என்று காத்திருந்த தமிழ் மக்களுக்கு ஏமாற்றமே மிச்சமாகக் கிடைத்திருக்கின்றது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் - 2002ஆம் ஆண்டில் தை மகள் பிறந்த போது - தமிழர் தம் வாழ்வில் சமாதான ஒளிக்கீற்று தென்பட்டது. ஆனால், அது, பிரகாசமாகி சமாதான சோதியாய் உருவெடுக்க முன்னரே மறைந்து விடுமோ என்ற அரசியல் அந்தகார நிலையை நோக்கி இப்போது சுருங்கத் தொடங்கிவிட்டது.

ஈழத் தமிழர்களின் நியாயமான அபிலாசைகளை நிறைவு செய்யும் எந்தத் தீர்வையும் அவர்களுக்கு வழங்கக்கூடாது எனக் கருதும் சிங்களப் பேரினவாதிகள் ஒன்று திரளத் தொடங்கி விட்டார்கள். அவர்களது ஐக்கியம் - நெருக்கம் - ஒன்றிணைவு - சமாதானத்துக்கான அமைதி முயற்சிகளை ஒரேயடியாகச் சந்தேகத்துக்கு உரியனவாக்கிவிட்டது.

சிங்களப் பேரினவாதம் என்றுமே ஈழத் தமிழர்களுக்கு உருப்படியான தீர்வு ஒன்றை சமாதான முறையில் - அமைதி வழியில் - வழங்க முன்வரமாட்டாது என்ற தமிழர் தரப்பின் ஆதங்கத்துடன் கூடிய கருத்து இன்று சர்வதேச உலகத்தின் முன்னர் நிதர்சனமாகி உறுதிப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த இரண்டு ஆண்டுகால அமைதி முயற்சிகளுக்கு தமது ஒரு கையெழுத்து மூலம் நிரந்தரவேட்டு வைத்தவர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பக்கத்திலிருந்த மூன்று அமைச்சுக்களைத் தாம் பிடுங்கி எடுக்கின்றார் என்பதைப் பிரகடனப்படுத்தும் ஆவணத்தில் அவர் கையொப்பமிட்டதோடு சமாதான நடவடிக்கைகளுக்கு சாவு மணி அடிக்கப்பட்டு விட்டது.

அவருக்கு இன்னும் இரண்டு ஆண்டுகால ஆட்சி எஞ்சியிருக்கின்றது. அதற்குப் பின்னராவது சமாதானப் பூ மலர வாய்ப்புக் கிட்டும் என்று பலரும் பகல் கனவு கண்டனர். ஆனால், அந்தப் பதவிக் காலத்தைத் தாமே மேலும் ஓராண்டுக்கு நீடிக்கமுடியும் என்று ஒரு குண்டைத்தூக்கிப் போட்டு தீர்வுக்கான நம் பிக்கையை வெறும் பகல் கனவாக்கியுள்ளார் ஜனாதிபதி குமாரதுங்க.

1970இல் பிரதமராகப் பதவியேற்ற - தற்போதைய ஜனாதிபதி குமாரதுங்கவின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்கா- அப்போதைய அரசமைப்புப்படி 1975 வரையே ஆட்சியில் நீடித்திருக்கமுடியும். ஆனால், புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டுவந்ததன் மூலம் தமது ஆட்சிக் காலத்தை தாமே இரண்டு ஆண்டுகளுக்கு - 1977 வரை - அவர் நீடித்துக்கொண்டார்.

அவ்வாறு மக்கள் அனுமதியின்றித் தமது பதவியை இரண்டு ஆண்டுகள் நீடித்த ஒரு செயலைப் புரிந்ததற்காக அவருடன் அவரது கட்சியும் அடுத்த 17 ஆண்டுகள் எதிர்க்கட்சித் தரப்பில் அமர வேண்டியதாயிற்று.

இப்போது அவரது மகள் அதேபாணியில் தவறுசெய்ய முற்படுகின்றார். அதன் விளைவாக அவரது கட்சி இன்னும் எத்தனை ஆண்டுகளுக்கு எதிர்க்கட்சியில் தொடர்ந்து அமரவேண்டி நேரிடலாம் என்பதை இப்போதே சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

உரிய காலத்தில் மக்கள் முன்செல்லாமல் - தாயைப் போலவே மகளும் - அரசமைப்புச் சட்டத்தைக் காட்டி ஆட்சியில் நீடிப்பது விபரீத விளைவுகளையே தரும்.

'பழையன கழிதலும் புதியன புகுதலும்' பொங்கல் சிந்தனை. அதற்கு இடம்கொடுக்க ஜனாதிபதி முன்வருவதே நல்லது. அத்தகைய வழியில் அவரது சிந்தனை பொங்கட்டும். தவறின் தம்மைச் சூழும் வினைக்குத் தாமே பதில் கூறவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்படலாம்.

### பயிர்ச் செய்கைக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கும்

# பாதீனியம் களையை அழிப்பதில் பொதுமக்கள் அக்கறையும் அவசியம்

### தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்க வழியுண்டு

வலிகாமம் தெற்கு,ஜன.15

யாழ்ப்பாண மாவட்டத்தில் பயிர்ச் செய்கைக்கு பாரிய அச்சுறுத்தலாக விளங்கும் பாதீனியம் செடியை முற்றாக அழிப்பதில் விவசாயிகள் மட்டுமல்லாது அனைத்து பொதுமக்களும் அக்கறையுடன் பங்களிப்புச் செல்வது அவசியமாகும்.

யாழ்ப்பாணம் விவசாய திணைக்கள உதவி விவசாயப் பணிப்பாளர் (விரிவாக்கம்) ச.சின்னத்துரை மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

பாதீனியத்தை கட்டுப்படுத்துவது அல்லது அழித்தொழிப்பது தொடர்பாக அலட்சியம் செய்வது தண்டனைக்குரிய குற்றமாகும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த காலங்களில் பாதீனியம் செடியை கட்டுப்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பயனளிக்கவில்லை.

கடந்த மாதத்தில் பெய்த மழையை அடுத்து பாதீனியம் செடி மீண்டும் வேகமாகப் பரவி வருகின்றது. யாழ்ப்பாண மாவட்டத்தில் புத்தூர், நவக்கிரி, சிறுப்பிட்டி, ஆவரங்கால், கோப்பாய், உரும்பிராய், மருதனார்மடம், உடுவில், ஈவினை, புன்னாலைக்கட்டுவன் ஆகிய இடங்களில் மிகக்கூடுதலாக வளர்ந்து காணப்படும் இச்செடி பயிர்ச்செய்கைக்கு பெரும் சவாலாக விளங்குகின்றது.

தமது காணிகளில் பாதீனியம் களை இருந்தும் அவற்றைக் கட்டுப்படுத்தத் தவறும் பட்சத்தில் நீதிமன்றம் மூலம் ஒரு லட்சம் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது சிறைத் தண்டனை வழங்கப்படும் என்று பொதுமக்களுக்கு உதவி விவசாயப் பணிப்பாளர் அறிவுறுத்தி உள்ளார். (ம-152)

# குடாநாட்டுப் பாடசாலைகள் அபிவிருத்திக்கு இந்த வருடம் 38 கோடி ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ். குடாநாட்டில் உள்ள பாடசாலைகளின் அபிவிருத்தி மற்றும் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு இந்த ஆண்டு 38 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது கடந்த ஆண்டு ஒதுக்கீட்டைவிட அதிகமாகும் என்று யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நிதியுதவியில் இருந்து பாடசாலைக் கட்டுமானப்பணிகள், புனரமைப்புப் பணிகள் என்பன மேற்கொள்ளப்படவுள்ளன. கோப்பாய்க் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளே இந்த வருடம் கூடுதலாக அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.

"இந்தப் பணிகளுக்கென பிரதமர் அலுவலகம் ரூ.15 கோடி, 'நிக்கொட்' அமைப்பு ரூ.10 கோடி, 'யுனிசெவ்' நிறுவனம் ரூ.8 கோடி, ஜி.ரி. இசற் நிறுவனம் ரூ.2 கோடியையும் ஒதுக்கீடு செய்துள்ளன. யாழ். மாவட்ட அரச அதிபர் அலுவலகம் 3 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. ஏனைய பல நிறுவனங்களும் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு உதவவுள்ளன" - என்று கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

அரச அதிபரினால் ஒதுக்கப்படும் நிதியில் இருந்து பாடசாலைகளின் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

'யுனிசெவ்' அமைப்பின் நிதியிலிருந்து பாடசாலைகளுக்கான குடிதண்ணீர் வசதிகளும், ஜி.ரி.இசற் அமைப்பின் நிதியிலிருந்து பாடசாலைகளுக்கான மலசலகூட வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன.

கடந்த கால போர் அனர்த்தங்களால் குடாநாட்டுப் பாடசாலைகள் மிக மோசமான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றன. பல்வேறு பாடசாலைகளும் பெரும் வளப்பற்றாக்குறையுடனேயே இயங்கி வருகின்றன. அவற்றை ஓரளவுக்காவது நிவர்த்தி செய்யும் அடிப்படையிலேயே இம்முறை நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-6)

# ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் இனிமேல் விரும்பிய பாடங்களைத் தெரியும் முறை

### தேசிய கல்வி ஆணைக்குழு அரசுக்குச் சிபாரிசு

கொழும்பு,ஜன.15

ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சையில் தற்போதுள்ள கட்டாய பாடங்களுக்குப் பதிலாக மாணவர்கள் தாம் விரும்பும் ஏதாவது 3 பாடங்களைத் தெரிவு செய்வதற்கான முறை ஒன்றை தேசிய கல்வி ஆணைக் குழு அரசுக்குச் சிபாரிசு செய்துள்ளது.

இப்புதிய திட்டத்தால் கல்விசார் முறைகளை அடிப்படையாகக் கொண்ட ஜி.சீ.ஈ. உயர்தரப் பாடஅமைப்பானது கைவிடப்படும் என தேசிய கல்வி ஆணைக்குழு கூறியுள்ளது.

தற்போதிருக்கும் விஞ்ஞானம், வர்த்தகம் மற்றும் கலைத்துறையெனும் கடினமான முறைகளிலிருந்து மாணவர்கள் விடுவிக்கப்படுவர். அவர்கள் தாம் விரும்பும் பல்வேறுபட்ட பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்வதற்கு இப்புதிய திட்டம் உதவும்.

தற்கால தேவைகளுக்கேற்றவாறு இப்போதிருக்கும் கல்வி அமைப்பு முறைகள் மறுசீரமைக்கப்பட வேண்டுமென தேசிய கல்வி ஆணைக்குழு அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்துள்ளது.

2002 மற்றும் 2003இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் பொதுக் கல்வித் துறையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடுகளின் பின்னரே தேசிய கல்வி ஆணைக்குழு அரசாங்கத்திற்கு இப்புதிய சிபாரிசுகளைச் செய்துள்ளது.

எனினும் மருத்துவம் மற்றும் பொறியியல் துறைகளில் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் குறிப்பிட்ட சில பாடங்களை அவசியம் கற்க வேண்டிவரும் என்று பல்கலைக்கழகங்கள் தெரிவிக்கலாம் என புதிய திட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

தற்போது உயர்தரப் பாடத்திட்டத்தில் மொத்தமாக உள்ள 41 பாடங்கள் இனிமேல் 31 பாடங்களாகக் குறைக்கப்படும். தற்போதுள்ள வழமையான பொதுப் பரீட்சைத் தாள், பல்கலைக்கழக அனுமதிக்கு அவசியமான ஓர் அங்கமாகத் தொடர்ந்தும் இருக்குமென தேசியகல்வி ஆணைக்குழு தெரிவித்துள்ளது. விஞ்ஞானம் கற்கும் உயர்தர மாணவர்களுக்கு, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையில் செயன்முறைப் பரீட்சையும் ஒரு பகுதியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-து)

# உருளைக் கிழங்கு பயிரில் பிற்கூற்று வெளிறல் நோய்

### குப்பிளானில் இனங்காணப்பட்டுள்ளது

வலிகாமம் தெற்கு,ஜன.15

வலிகாமம் தெற்கில் பயிரிடப்பட்டுள்ள உருளைக்கிழங்கு செய்கையில் 'பிற்கூற்று வெளிறல்' என்னும் பங்கஸ் நோய் காணப்படுவதாக உடுவில் கமநல சேவை நிலைய விவசாய போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

உடுவில் கமநல சேவைப் பிரிவில் இம்முறை உருளைக் கிழங்கு செய்கை மட்டுப்படுத்தப்பட்ட அளவில் - சுமார் 10 ஏக்கர் நிலப்பரப்பில் - பயிர்செய்யப்பட்டுள்ளது. அவற்றின் வளர்ச்சி நிலை திருப்திகரமாக இருப்பதாக விவசாய போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், குப்பிளான் பகுதியில் செய்கை பண்ணப்பட்டுள்ள உருளைக் கிழங்கு பயிரில் 'பின்கூற்று வெளிறல்' நோய் அதிகரித்து காணப்படுவதாகவும், இந்நோய் ஏனைய இடங்களுக்கு பரவாமல் கட்டுப்படுத்த வேண்டும் என்றும், நோய்க் காவிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

'பிற்கூற்று வெளிறல்' நோயை பரவாமல் தடுப்பதற்கு "டக்கோனில்" என்ற பங்கஸ் கிருமி நாசினியை தெளிக்குமாறும் -

காவிகளைக் கட்டுப்படுத்த 'மொஸ்பிளான்' கிருமிநாசினியை பயன்படுத்துமாறும் விவசாய போதனாசிரியர் அறிவுறுத்தி உள்ளார்.

பயிரில் வெண்ஈயும் காணப்படுவதால் அவற்றை அகற்ற 'அட்மயர்' அல்லது 'மொஸ் பிளான்' கிருமிநாசினியைப் பயன்படுத்துமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

நன்கு வளர்ச்சிபெற்று காணப்படும் உருளைக்கிழங்கு பயிரில் பரவும் இந்நோயை கட்டுப்படுத்தாது விடின் விவசாயிகள் எதிர்பார்த்த விளைவை பெறமுடியாது போய்விடும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். (ம-152)

**நாளை**

தை 02
வெள்ளிக்கிழமை
(16.01.2004)
திதி : நவமி
பிற்பகல் 4.21 வரை
நட்சத்திரம்: சுவாதி
பிற்பகல் 4.59 வரை
சுபநேரம்: 6.34-8.04
ராகுகாலம்: 11.04-12.34
(பழைய நேரப்படி)

**உதயவாக்கு**

அன்புடன் செய்யப்படும் எந்தவொரு காரியமும் ஆனந்தத்தைத் தரும்.

# விபத்துத் தொடர்பான வழக்கில் தமிழர்கள் மூவருக்குப் பிணை

### பிரிட்டிஷ் நீதிமன்று வழங்கியது

கொழும்பு,ஜன.15

பிரிட்டனில் நடைபெற்ற கார் விபத்தொன்றுடன் தொடர்புடையவர்கள் என்று தடுத்து வைக்கப்பட்டிருந்த இலங்கையைச் சேர்ந்த தமிழர்கள் மூவர் அந்நாட்டு நீதிமன்றினால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆசிரியை ஒருவரும் அவரது கருப்பையில் இருந்த 7 மாதப்பெண் சிசுவும் மரணமடைவதற்குக் காரணமாக இருந்த விபத்துடன் தொடர்புடையவர்களென்றே இந்த மூவரும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி தனது பணியை முடித்து விட்டுக் காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்த பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த டெஸாரோபிற்றி என்பவரது காருடன் இலங்கையர்கள் பயணம் செய்த கார் மோதுண்டதில் அவர் மரணமடைந்தார்.

இதனையடுத்து இரத்தினம் யோகன் (வயது28), இராமசாமி நல்லைக்கந்தன் (வயது28), புஸ்பராசா சின்னப்பயல் ஆகியோர் பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வழக்கு விசாரணைகளின் போது இவர்கள் மூவரும் தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளனர். அடுத்த மாதம் 10ஆம் திகதிக்கு வழக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. (ம-10)



# பொங்கல் நல்வாழ்த்துக்கள் !

அன்பும் அருளும் செல்வமும்
இல்லத்தில் பெருகி விளங்கிட
மங்கள மகிழ்வு மனைகளில்
என்றும் நிலைத்திட
இப் பொங்கல் திருநாளில்
இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்.

உங்கள் எல்லா விதமான தேவைகளுக்கும்
தரமான டிஜிட்டல் பிரின்டிங்

**ACME FOTO**
**அக்மி ஃபோட்டோ**
ஸ்ருடியோ & கலர் லபோரட்டரி

135, காலி வீதி வெள்ளவத்தை,
கொழும்பு 6, இலங்கை.
தொ.பே : 2583952, 4512679
ஃபக்ஸ் : 2583952
மின் அஞ்சல் : acmefoto@sltnet.lk
acmedigi@sltnet.lk

இலங்கையில் அதி உயர் தொழில் நுட்பத்தை
கொண்ட டிஜிட்டல் ஆய்வுக் கூடம்.

Flex Graphic

# வறுமைக்கோட்டின்கீழ் வாழும் மக்களின் வாழ்வை மேம்படுத்த புதிய திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்

## சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.15

யாழ். சமூக அபிவிருத்தி மன்றம் யாழ். மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்த இவ் வருடம் பல புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இத்தகவலை யாழ். சமூக அபிருத்திமன்றத் தலைவர் திருமதி என். ஜெகதீஸன் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு சிறுகைத்தொழில் மற்றும் தையல் பயிற்சி என்பன வழங்கப்படவுள்ளன.

குடும்பத் தலைவர்களை இழந்த பெண்களில் சுயதொழில் ஆர்வமுள்ளவர்களைத் தெரிவுசெய்து உலர் உணவு பொதிசெய்தல், தையல் பயிற்சி வழங்குதல் என்பனவற்றின் மூலம் வருமானம் பெறுவதற்கான வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

ஏழ்மையின் காரணமாக பாடசாலைக்குச் செல்லாத மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அவர்களுக்கு வேண்டிய பாடசாலை உபகரணங்களும் எமது மன்றத்தினால் பெற்றுக்கொடுக்கப்படவுள்ளன. மெல்லக் கற்போர் திட்டத்தின் மூலம் அவர்களுக்கு கல்வியும் கற்பிக்கப்படவுள்ளது.

எமது மன்றத்தில் இணைந்தவர்களுக்கு குறைந்த வட்டி வீதத்துடன் குறுகிய கால கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவு ரீதியாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன. தற்போது சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் மற்றும் நல்லூர், தெல்லிப்பழை ஆகிய பிரிவுகளில் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் இடம்பெற்றுள்ளன. ஏனைய பகுதிகளில் மிக விரைவில் இக்கருத்தரங்குகள் நடைபெறவுள்ளன.

எமது மன்றத்தில் 120 கிளைச் சங்கங்கள் இணைந்து செயற்பட்டு வந்தன. ஆனால் இங்கு நடைபெற்ற யுத்தம் காரணமாக அவை செயலிழந்து போயுள்ளன. தற்போது 54 கிளைச் சங்கங்களே இயங்குகின்றன. ஏனையவற்றை புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சங்கங்களின் ஊடாகவே எதிர்காலத்தில் எமது மன்றத்தின் உதவிகள் வழங்கப்படவுள்ளன என்றார்.

(ம-8-5)

# சாவகச்சேரி அபிவிருத்திக்கு ஆலோசனைச்சபை அமைப்பு

## அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று

தென்மராட்சி,ஜன.15

சாவகச்சேரி நகரின் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல வசதியாக சாவகச்சேரி நகர அபிவிருத்தி ஆலோசனைச் சபை ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட உள்ளது. இதற்கான நடவடிக்கையை சாவகச்சேரி நகரசபைச் செயலாளர் மேற்கொண்டுள்ளார்.

இச்சபையின் அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று பி.ப.2.00 மணிக்கு சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி நகர மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சமூக மட்டத்திலான பொது அமைப்புகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கி இச்சபை உருவாக்கப்படவுள்ளதாக நகர சபைச் செயலாளர் மு.செ. சரவணபவ அறிவித்துள்ளார். (ஒ-117)

# மலையக மக்களுக்கு 20 எம்.பிக்கள் தேவை

## மறுசீரமைப்புக் குழுவிடம் வலியுறுத்து

மலையக மக்களின் விகிதாசாரத்திற்கு ஏற்ப 20 நாடாளுமன்ற உறுப்பினர்களை தெரிவு செய்யும் வகையில் தேர்தல் தொகுதி முறையை மாற்றியமைக்க வேண்டும்.

- இவ்வாறு சமூக அபிவிருத்தி அமைச்சரும், மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான பெ. சந்திரசேகரன் தலைமையிலான தூதுக்குழுவினர் தேர்தல் மறுசீரமைப்புக்கான நாடாளுமன்றக் குழுவிடம் வலியுறுத்தியுள்ளனர்.

தேர்தல் மறுசீரமைப்பிற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவிற்கு, மலையக மக்கள் முன்னணியினர் முன்மொழிவுகளை சமர்ப்பித்து மேற்கண்டவாறு வலியுறுத்தினார்கள். நேற்றுமுன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

சந்திப்புத் தொடர்பாக விடுக்கப்பட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தேர்தல் தொகுதி மறுசீரமைப்பின் போது மலையக மக்களின் விகிதாசாரத்திற்கேற்ப மாகாண சபைகள், மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகள் யாவும் மறுசீரமைக்கப்படவேண்டுமென்று மலையக மக்கள் முன்னணியினர் வலியுறுத்தினார்கள்.

தேர்தல் தொகுதி நிர்வாக ஆணைக்குழு அமைக்கப்படும்போது மலையக மக்களின் பிரதிநிதித்துவம் அதில் இடம்பெற வேண்டுமென்று வலியுறுத்திய தூதுக்குழுவினர், மலையக மக்கள் அடையாள அட்டை பெறுவதில் எதிர்நோக்கும் சிரமங்கள், வாக்காளர் பட்டியலில் பெயர் பதிவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்கள், பெருநதோட்டப் பகுதியிலுள்ள வாக்காளர்களை வாக்குச் சாவடிக்குச் செல்லவிடாது அச்சுறுத்தல் போன்ற பல்வேறு விடயங்களை எடுத்துக் கூறினார்கள்.

தூதுக்குழுவினரின் கோரிக்கைகளை மிக அவதானமாக செவிமடுத்த மறுசீரமைப்புக் குழுவின் தலைவர் தினேஷ் குணவர்த்தன, அமைச்சர் கருஜயசூரிய, நாடாளுமன்ற உறுப்பினர்களான ராஜா கொலுரே, இரா. சம்பந்தன், தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க, ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் கே.ஜே.வி. ரணசிங்க ஆகியோர் இது சம்பந்தமாக உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியுள்ளார்கள்.

## தென்மராட்சி கல்வி நிறுவனங்களுக்கு!

தென்மராட்சி,ஜன.15

தென்மராட்சிப் பிரதேசத்தில் இதுவரை பதிவு செய்யப்படாத தனியார் கல்வி நிறுவனங்கள் மற்றும் பிரத்தியேக வகுப்புகள் ஆகியவற்றை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் தென்மராட்சிக் கல்வி நிறுவனங்களின் ஒன்றியத்தில் பதிவு செய்துகொள்ளுமாறு ஒன்றியச் செயலாளர் சி.கோகுலன் அறிவித்துள்ளார்.

(ஒ-117)

## சைவ பரிபாலனசபை நடத்திய

# சைவசமயப் பரீட்சை முடிவுகள் இந்த மாத இறுதியில் வெளிவரும்

தெல்லிப்பழை,ஜன.15

கடந்த வருட இறுதியில் நடைபெற்றுமுடிந்த சைவபரிபாலன சபையின் சைவசமயப் பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில் வெளிவருமென சைவபரிபாலன சபைத் தலைவர் வ.கந்தசாமி தெரிவித்தார்.

கடந்த வருட இறுதியில் சைவபரிபாலன சபை 2003ஆம் ஆண்டுக்கான சமயப் பரீட்சையை நடத்தியது. வடமாகாணத்தைச் சேர்ந்த 422 பாடசாலைகளைச் சேர்ந்த 79 ஆயிரத்து 500 மாணவர்கள் பங்குபற்றினர். மேற்படி பரீட்சை விடைத்தாள்கள் தற்போது திருத்தப்பட்டு புள்ளியிடும் பணியும் பூர்த்தியடைந்துள்ளது. இதனையடுத்து இம்மாத இறுதியில் மேற்படி பரீட்சை முடிவுகள் வெளியிடப்படவிருப்பதாக தலைவர் மேலும் தெரிவித்தார்.

அதேவேளை -

ஏப்ரல் கடைசிவாரத்தில் நடைபெறவுள்ள இளம் சைவப்புலவர், சைவப் புலவர் பரீட்சைக்குத் தோற்றவுள்ளோருக்கு உதவும் வகையில் சைவபரிபாலன சபையின் நூலகம் வியாழன், வெள்ளி தவிர்ந்த நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 5 மணிவரை திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-150)

## சாயி சிந்தனை

### இறைவனை நேசியுங்கள்



இன்று மனிதன் இறைவனை மிகவும் விரும்பி, அவரைப் பற்றியே இடைவிடாது சிந்திக்கின்றான். ஆனால், விரும்புவதினாலும் அவரைப் பற்றி நினைப்பதினாலும் மட்டுமே இறைவனை உணர்ந்துவிட முடியாது. இடைவிடாது இறைவனைச் சிந்தித்திருப்பது மட்டும் அவரை மகிழ்வித்துவிடாது எம்மை முழுமையாக அவரிடம் ஒப்படைத்தால் மட்டுமே அவரைப் பற்றிய அனுபவத்தைப் பெற எம்மால் முடியும். எப்போது நீங்கள் இறைவனிடம் உங்களை முழுமையாக ஒப்படைக்கிறீர்களோ அப்போதே நீங்களும் அவரும் ஒன்றாகிவிடுகிறீர்கள்.

இறைவனோடு இணைவதற்கு ஒருவன் மேற்கொள்ள வேண்டிய ஆன்மீக சாதனைகள் எவை? நெருப்பும் கரியும் தனித்தனியே இருக்கும் போது, அவை அவற்றின் இயல்புகளோடு இருக்கின்றன. அவற்றை ஒருங்கே இணைத்து, விசிறிவிடும்போது கரி நெருப்பாக உருவாகின்றது. அதைப் போலவே இறைவனுக்கு அருகில்சென்று, அவரை முழுமனதுடன் நேசியுங்கள். அந்த அருகிலும், இறைவன் மேலுள்ள நெருக்கமும் இணைந்து கடைசியில் உங்களை இறைவனுடன் ஒன்றாக்கிவிடும். இதைத்தான் வேதாந்தம் "பிரும்மவித் பிரும்மைவ பவதி" (பிரம்மனை உணர்ந்தவன் பிரம்மனாகவே மாறுகிறான்) என்று உரைக்கிறது.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

## சனசமூக நிலையத்துக்கு கணனி அன்பளிப்பு

வலி.கிழக்கு, ஜன.15

கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்துக்கு ஈ.பி.ஆர். எல். எவ். (சுரேஷ்அணி) அமைப்பின் செயலாளர் நாயகமும் தமிழர் கூட்டமைப்பின் உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்தப் பகுதி இளைஞர்கள், யுவதிகளின் கல்வி நலன்கருதி வழங்கப்பட்ட கணனி மூலம் இலவச கணனி வகுப்புக்களை நடத்தவுள்ளதாக சனசமூக நிலையத்தின் தலைவர் தெரிவித்தார். (எ-180)

## கல்விச்சாலை காட்சிகள்



யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பெற்றோர் தினவிழாவின் போது இடம்பெற்ற மாணவிகளின் கோலாட்ட நிகழ்வில் ஒரு காட்சி. (ஒ-51)



உடுவில் மேற்குப் பாலர் பாடசாலை மாணவரின் ஒன்றுகூடல் நிகழ்வில் பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். கல்விவலய உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆசிரியமணி எம்.எஸ்.ஸ்ரீதயாளன் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். உடுவில் இந்து இளைஞர்மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன், செயலாளர் வி.பி.சசிவர்ணன், திருமதி க. அப்பாத்துரை, திருமதி ஞா.சிவனேசன் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஒ-152)



உலக உணவு தினத்தை முன்னிட்டு உள்ளூராட்சி திணைக்களத்தின் அனுசரணையுடன் ஊர்காவற்றுறை பிரதேச சபையினால் புளியங்கூடல் பாலர் பாடசாலை மாணவர்களுக்கு இலைக்கஞ்சி வழங்கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். (ஒ-7)



வலிகாமம் வடக்குப் பிரதேச சபை முன்பள்ளி விளையாட்டுப் போட்டி அண்மையில் மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. இதில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் க. ஞானவேல்ராஜா மங்கள விளக்கேற்றுகிறார். பிரதேச சபைச் செயலர் க. வைரமுத்து பாடசாலை அதிபர் எஸ்.மகேஸ்வரன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். (ஒ-150)



பருத்தித்துறை சதாவதானி கதிரைவேற்பிள்ளை பாலர் பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அண்மையில் தம்பசிட்டி சனசமூக நிலையத்தில் நடைபெற்றது. அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் உட்பட நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களைப் படத்தில் காணலாம். (ஒ-6)

# மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)
இப்பொழுது யாழ்ப்பாணத்தில்...!

17-01-2004 முதல் 21-01-2004 வரை

இளைஞர்களே!
☆ சக்தி குறைவு ☆ ஞாபக மறதி ☆ பயம்
☆ நடுக்கம் ☆ நித்திரை குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா? கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீக்கப்படும்.

என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச்சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

தொடர்புகளுக்கு:

பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777 569205
T.P.: 3181, 5399

(சி-32752) (21-19-13)


# தகவல் தொழில்நுட்ப கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.15

நவீன தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு செம்மணி வீதியில் உள்ள வர்த்தக தொழில்துறை மன்றத்தில் இடம்பெறவுள்ளது.

முதலீட்டுச் சபையும் ஐ.நா. அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்தும் இந்தக் கலந்துரையாடலில் பிரிட்டனைச் சேர்ந்த தகவல் தொழில்நுடபத்துறை நிபுணர் ஜோன் கன்னா, முதலீட்டுச்சபையின் வடக்கு - கிழக்கு நிர்வாக அதிகாரி ரெரன்ஸ் சுந்தர ஆகியோரும் கலந்துகொள்வர். தகவல் தொழில் நுட்பத்துறையில் ஈடுபட்டவர்களும், ஆர்வமுள்ளவர்களும இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-3)

# இரங்கற் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஜன.15

சுன்னாகம் மயிலணிக் கந்தசுவாமி கோயில் பிரதம சிவாசாரியார் அமரர் சிவஸ்ரீ ச.வரதராஜேஸ்வரக் குருக்களின் இரங்கற் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30மணிக்கு மயிலணி கந்தசுவாமி கோயில் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி ஆலய அறங்காவலர் சபைத்தலைவர் திருமதி ம.திருச்சிற்றம்பலம் தலைமையில் கூட்டம் நடைபெறும்.

மாவை ஆதீனம் மஹாராஜஸ்ரீ சு.து.ஷண்முகநாதக்குருக்கள், அகில இலங்கை இந்துக்குருமார் ஒன்றிய குருபீடாதிபதி சிவஸ்ரீ ஐ.மகேஸ்வரக் குருக்கள், சர்வதேச இந்துமத குருபீட ஆஸ்திரேலியப் பிரதிநிதி டாக்டர் சிவஸ்ரீ நா.சோமஸ்கந்தக் குருக்கள், பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர், சிவஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள், சிவஸ்ரீ இ.சுந்தரேஸ்வரக் குருக்கள், சிவஸ்ரீ நா. சர்வவேஸ்வரக குருக்கள், சிவஸ்ரீ ந. சதாசிவஐயர், சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம், தவத்திரு சிவ.சண்முகவடிவேல், இளைப்பாறிய அதிபர் சு.துரைசிங்கம் ஆகியோர் மாட்சியுரை நிகழ்த்துவார்கள். (ஓ-152)

# பாராட்டி நன்றி தெரிவிக்கிறோம்



சித்தன்கேணி பெரியவளவு ஸ்ரீமகா கணபதிப்பிள்ளையார் ஆலயத்திற்கு மின்சார மங்கள வாத்தியத்தினை அன்பளிப்புச் செய்த. இந்து சமய கலாசார மாண்புமிகு அமைச்சர்

**கௌரவ தி.மகேஸ்வரன்**

அவர்களையும் அதனைப் பெறுவதற்கு உதவியாக இருந்தவர்களையும் பாராட்டி நன்றி தெரிவிப்பதோடு, விக்கினங்களைத் தீர்க்கும் விநாயகப் பெருமானின் அருள் கிடைக்க சபையின் சார்பாக வேண்டிக்கொள்கின்றோம்.

பெரியவளவு ஸ்ரீமகா கணபதிப் பிள்ளையார்
ஆலய பரிபாலன சபையினர். சித்தன்கேணி.

(27114)(35-21-19-13)


# இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி! தீராத இருமல், சளி, இளைப்பு மற்றும் நுரையீரல், சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

## சித்தாரா பனங் கற்கண்டு இருமல் பாணி

யாழ். குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும், கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Manufactured By:
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No:-6382) AR/PR/No:228

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:-
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல.: 021-222-2567

(21-19-13) (குறிப்பு:- சத்திரச்சந்திக்கு அண்மையில்) (சி-32383)


# மனமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்



புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாண நகரை வதிவிடமாகவும் கொண்ட எமது இனிய நண்பர்

உயர்திரு
**துரைச்சாமி குருநாதசிவம்**
(உரிமையாளர் - சிவா நறுமணப்பூங்கா - யாழ்ப்பாணம்,
தொழில் அதிபர் - றோயல் இன்டஸ்றிஸ், கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்ட பிரதேசசபைகள் – மாநகரசபை சித்தாயுர்வேத வைத்தியசாலைகளது தேவைக்கு ஆயுர்வேத மருந்துகளைப் பெறமுடியாத சூழ்நிலை நிலவிய காலத்தில் குறிப்பாக யாழ். மாவட்ட மக்கள் போக்குவரத்துக்கு மிகவும் சிரமப்பட்ட காலத்தில் பல இன்னல்களுக்கு மத்தியில் சேவை மனப்பான்மையுடன் ஆயுர்வேத மருந்துகளை முன்னின்று வழங்கிய இவர், அரச சேவை வைத்தியசாலைகளுக்கு மட்டுமல்லாது பொதுமக்களுக்கும் ஆயுர்வேத மருந்துகளை விநியோகம் செய்வதற்கென ஸ்ரீலங்கா ஆயுர்வேத கூட்டுத்தாபனம் – நாவின்னவில் பதிவுபெறறவர். மேலும், சித்த ஆயுர்வேத மருந்துகளை பொதுமக்களுக்கும் வைத்தியர்களுக்கும் அறிமுகப்படுத்தவென மூலிகை கண்காட்சிகள் – சிறப்புரைகள் கொண்ட விழாக்கள் நடத்தியவர். இதில் முதலாவது நிகழ்ச்சியாக அகில இலங்கை சித்தாயுர்வேத வைத்தியர் சங்க அனுசரணையுடன் அச்சங்கத்தலைவர் வைத்தியகலாநிதி இ. கனகலிங்கம் தலைமையில் மூலிகைக் கண்காட்சிகள – சித்தாயுர்வேத மருந்துகள் கண்காட்சியுடன் சிறப்புவிருந்தினர்களாக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு.ரி. வி. கிருஷ்ணசாமி, வடக்கு – கிழக்கு மாகாண சுதேச வைத்திய முன்னாள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி உரோ மகேஸ்வரன், சித்தபல்கலைக்கழக விரிவுரையாளர் பொன். இராமநாதன் போன்ற பெரியோர்கள், வைத்தியப் பெருமக்கள் ஆசியுடன் நடத்தி வெற்றிகண்டவர். இப்போது சித்தாயுர்வேத மருந்துகளைத் தரமாகவும், நியாயவிலையிலும் சிவா நறுமணப்பூங்கா நிறுவனம் மூலமாக விநியோகித்து வருகிறார்.

அவ்வாரது பொதுநலசேவை – பொதுமக்களிடையே உள்ள நன்மதிப்புக் காரணமாக இலங்கை அரசால் அகில இலங்கை சமாதான நீதிவானாக பட்டம் பெற்று யாழ். மாவட்ட நீதிமன்றில் மேலதிக நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்ததை இட்டு பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அவ்வார் சகல சௌபாக்கியங்களும் பெற்று தொடர்ந்தும் சேவைநாயகனாக அரும்பணிகள் செய்து சீரும் சிறப்புமாக பல்லாண்டு காலம் வாழ இறை ஆசிவேண்டி பிரார்த்தித்து மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வைத்தியகலாநிதி **இ.கனகலிங்கம்**
(முன்னாள் தலைவர் - அகில இலங்கை சித்தாயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம்)
வைத்தியகலாநிதி **ஐ. ஜெபநாமகணேசன்**
(முன்னாள் செயலாளர் - அகில இலங்கை சித்தாயுர்வேத வைத்திய அதிகாரிகள் சங்கம்)

(சி-32693) (21-19-13)


# யோகாசனம்

சகல நோய்களுக்கும் சிறுவர் முதல் முதியவர்கள் வரை இருபாலாருக்கும் உங்களுக்குக் கிடைக்கும் நேரத்திற்கு ஏற்ப வீட்டிற்கு வந்தோ அல்லது எமது நிலையத்திலோ தனித்தனியாக வயதிற்கு ஏற்ற இலகுவான பயிற்சியும் மற்றும் திருமண உளவியல் பிரச்சினைகளுக்கு ஆலோசனையும் விசேட பயிற்சியும் வழங்கப்படும்.

சஞ்சீவி நடராசா
மாஸ்ரர் வளவு
வட்டுவினி அம்மன் வீதி,
இணுவில் மேற்கு.

(27155) (21-19-13)


உங்கள் அனைவருக்கும்
எமது இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்!


# SPOKEN ENGLISH பேச்சு ஆங்கிலம்
## தபால் மூலம் நடைபெறும்

ஆங்கிலம் பேச வேண்டும் என்று விருப்பம்,
ஆனால்.... ஏதாவது தவறாகப் பேசி விடுவோமோ
என்ற தயக்கம், பயம். மற்றவர்கள் ஆங்கில
மொழியைப் பேசும் போது புரிந்துகொள்ள முடிகிறது.
ஆனால், நாம் பேசும்போது தயக்கம்.

**இது தானே உங்கள் பிரச்சினை?**
**கவலையை விடுங்கள்!**

உங்களுக்குத் தெரிந்த சில ஆங்கிலச் சொற்களைக் கொண்டே தயக்கமின்றி மிகக் குறுகிய காலத்தில் ஆங்கிலத்தைப் பேச, கேட்க, எழுத, வாசிக்கக்கூடிய முறையில் மிக விந்தையான உளவியல் அடிப்படையில், எளிய முறையில் படிப்போர் அனைவரும் தம்மால் ஆங்கிலம் பேச முடியும் என்னும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தக்கூடிய முறையில் தபால் மூலம் கற்றுத்தரப்படும்.

இலகுவான ஆங்கிலமொழிப் பேச்சுக்காகவா இவ்வளவு காலமும் வீணடித்தேன் என நீங்களே கூறக்கூடிய முறையில் பத்தாண்டுகாலக் கல்விப் போதனை அனுபவம் வாய்ந்தவரால் கற்றுத்தரப்படும்.

90 நாள்களில் ஆங்கிலப் பயிற்சியை திறம்பட முடிக்கும் மாணவர்களுக்கு Diploma in English Certificate வழங்கப்படுவதோடு, Business English பாடத்தையும் தொடரமுடியும்.

தபால் மூலம் கற்க விரும்புவோர் கீழ்க்காணும் விண்ணப்பப்படிவத்துடன் சுய விலாசமிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்ளவும்.

**APPLICATION FORM**
NAME : ................................................
ADDRESS ................................................
விரும்பும் பாடநெறி ................................................

(C/32555)

**BRIGHT BOOK CENTER (PVT) LTD**
S-27 FIRST FLOOR COLOMBO CENTRAL SUPER MARKET
COMPLEX P.O.BOX NO: 162. COLOMBO-11.TELE.434770


# நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1918 - 12 - 14



உதிர்வு 2003 - 01 - 25

அமரர்
**A.R.சிவகுருநாதன்**

12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 1924 - 08 - 09



உதிர்வு 1992 - 09 - 06

திருமதி
**தவமணி சிவகுருநாதன்**

அன்பு மொழி கூறி எங்களின் சிந்தை
மகிழவைத்து பாரினிலே எம்மை மிக நல்ல
பண்புடனே வாழ வைத்தவர்களே! இப்போது
எமது வாழ்வுதனைப் பார்த்து மகிழ நீங்கள்
இன்று எம்மோடு இல்லையே! தெய்வங்களே!
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கிறோம்!

உங்கள் நினைவில் வாழ்கின்ற
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

102,அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(27103)(35-19-13-21)

# நீங்கா நினைவில் ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 - 02 - 1948



உதிர்வு 05 - 02 - 2002

அமரர் **நடராஜா சிவபரன்**

திதி: அபரபக்க அட்டமி
15.01.2004

பண்பையும் பாசத்தையும் எமக்கு
பரிவுடன் காட்டிய அன்புத் தந்தையே!
எமைப் பரிதவிக்க விட்டு
சிவத்துள் சிவமாகி
சிவனின் பாதார விந்தங்களை
அடைந்தீர்களே!
உங்கள் உடல் பிரிந்தாலும்
உங்கள் நினைவெல்லாம்
எங்களிடம்தான்! நீங்கள் மறைந்து
ஆண்டுகள் இரண்டு கடந்தும் உங்களை
இன்று நினைவு கூருகின்றோம்.

கோயில் வீதி,
சங்கானை.

(27133)(35-21-19-14) - குடும்பத்தினர்.

# இயற்கையோடு இசைந்த வாழ்வே அக அமைதியை ஏற்படுத்தும்..!

வளத்தையும், வளர்ச்சியையும் அளிப்பதோடு எமது நற்கருமங்களின் முயற்சிக்கு சாதகமாக அமைகின்ற உத்தராயண காலத்தின் தொடக்க நாளில் பொங்கல் பண்டிகை அமைந்துள்ளது. குடும்பம் ஒன்றில் ஒருவரின் எந்தவொரு செயலும் அக்குடும்பத்திலுள்ள ஏனையோருக்கும் ஏதோவொரு தாக்கத்தை ஏற்படுத்துவது போல, பிரபஞ்சம் என்ற குடும்பத்திலுள்ள நட்சத்திரங்கள், கோள்கள் ஆகியவற்றின் செயற்பாடுகள் ஏனையவற்றிக்கும் ஏதோ ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இந்த அடிப்படையிலே தைப்பொங்கல் தினத்திலிருந்து ஆடிப்பிறப்பு வரை சூரியனது பூமி சார்பான வடக்கு நோக்கிய பயணமான உத்தராயண காலம் மேற்குறிப்பிட்டபடி எமது முயற்சிக்கு சாதகமாக அமைகின்றது. விஞ்ஞானக்கருவிகளின் கண்டுபிடிப்புக்கள் பெருகியிராத காலத்திலேயே சூரிய கிரகணங்கள், சந்திர கிரணகங்கள் நிகழுகின்ற காலத்தையும் அவை தோற்றுகின்ற இடங்களையும், திட்டவட்டமாக அறிவித்த சோதிடக்கலை விற்பன்னர்களின் ஆராய்ச்சியின் முடிவுகளே இவை.

எமது உடல் ஐந்து கர்ம இந்திரியங்களை - அதாவது ஐந்து செயல் உறுப்புக்களை - கொண்டுள்ளது. இதனால் எமது உடல் செயலுக்குக் கட்டுப்பட்டுள்ளது. உடலாரோக்கியத்தைப் பேணுவதற்காக வேனும் நாம் செயல் செய்தேயாக வேண்டும். இது தவிர்க்கமுடியாத தொன்றாகும். செயல்களைச் செய்யும் பொழுது எமது விருப்பு வெறுப்பு எண்ணங்களால் ஏற்படும் வெற்றி, தோல்வி உணர்வுகள் இரண்டுமே எமக்குப் பெரும்பாதிப்பை ஏற்படுத்துகின்றன. தொடர்ந்த வெற்றிகள், "நான் எதையும் செய்யமுடியும்" என்கின்ற அகங்காரத்தைத் தோற்றுவித்து அறிவுக்கண்ணை மூடிவிடுகிறது. இது

## பொங்கல் சிந்தனை

பலவழிகளிலும் அவனுக்கும், பிறருக்கும் பெரும்தீங்கை ஏற்படுத்துகின்றன. இதேபோல, தொடர்ந்த தோல்விகளும், வெட்கம், பொறாமை, வெறுப்பு, பகைமை - போன்ற அசுரத்தனங்களை ஏற்படுத்துகிறது. இவை இரண்டும் அவனதும் பிறரதும் அக அமைதியையும், புற அமைதியையும் கெடுத்துவிடுகின்றது. இன்றைய உலக அமைதியின்மைக்கு இவையே மூலகாரணமாகும்.

எமது ஒவ்வொரு செயலும் சிந்தனையும் பிறருக்கும் எனக்கும் என்ன பாதிப்புக்களை ஏற்படுத்தும், ஏற்படுத்துகின்றது என்பதைச் சிந்தித்து செயல்படும் ஆற்றலை, தன்மையை மேற்குலகிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட திணிக்கப்பட்ட, இன்று புத்திஜீவிகள், கல்விமான்கள் என்று தங்களை நினைத்துக்கொள்பவர்களால் அங்கீகரிக்கப்பட்ட போற்றப்படுகின்ற இந்தப் பாடசாலைப் படிப்புக்கள் (கல்வியல்ல) வழங்கவில்லை. மாறாக பிறரின் அமைதியைக் குழப்பி, ஏமாற்றி பணம் பறிக்கும், பணத்திற்காக மட்டும் வேலைசெய்யும் இழிநிலையைத் தோற்றுவித்துக் கொண்டிருக்கும் சந்தைப்படுத்தலும், முகாமைத்துவம் என்ற படிப்பே உலகை வழிநடத்துகிறது. உலகை விழுங்கிவிட்டது. என்று இதில் மனித உருவங்கள் விழிப்படைகின்றதோ அன்று தான் மனிதம் வளரும். உலகிற்கு விமோசனம் ஏற்படும்.

வெற்றி, தோல்வி மனப்பான்மையால் ஏற்படும் பேராபத்தைப் போக்க கீதை வழிகாட்டியிருக்கிறது. செய்யும் செயலின் பயனில் பற்று வைக்காதே, 'செய்வதை இறை அர்ப்பணத்தோடு செய்' என்பதே அவை. இந்த உயர்ந்த தனமைகளை உள்ளடக்கியதே வழிபாடுகளும், பண்டிகைகளுமாகும். ஆனால், இந்த உயர்ந்த தன்மைகளைக் கைவிட்டு ஒரு கேளிக்கையாகவே உலகம் பண்டிகைகளை நோக்குகின்றது.

பிரபஞ்சத்தில் ஒவ்வொன்றும் ஏனையவற்றைச் சார்ந்தே உள்ளது. ஒருவன் அவனது சுற்றுச்சூழலில் நேரடியாகச் சார்ந்துள்ளான். அதனாலேயே அவனால் உயிர்வாழ முடிகிறது. எனினும் அதைப் பொருட்படுத்தாது மறந்து செயல்படுவதாலேயே இந்தச் சூழல் மாசடைதலுட்பட்ட எல்லா அனர்த்தங்களும்.

## ஆத்மசொரூபன்

ஒருவன் 22, 23 வயதுவரை படித்து ஒருபட்டத்தைப் பெறுகிறான் என்றால் அவ்வளவு காலமும் அவனது சுற்றுச்சூழல் அவனுக்குச் சாதகமாக அமைந்திருந்தது என்பது வெளிப்படை. பெற்றோரின் வருமானம், அதிகம் குழப்பமில்லாத குடும்பம், பெற்றோரதும் இவனதும் உடலாரோக்கியம்,.... ஏன் பரீட்சைக்கு செல்லும் பொழுது விபத்து, நோய் ஏற்படாமை போன்ற எண்ணுக்கணக்கற்ற காரணிகள். இவற்றையெல்லாம் மறந்து அவனை மட்டும் பாராட்டும், புகழ் பாடும் சின்னத்தனமான செயலகளே உலகில் வக்கிரநிலை பெருகுவதற்கு காரணமாகும். இதனாலேயே, பல் கலைக்கழகத்தில் கூட அடாவடித்தனங்கள், கொலைகள் நிகழ்கின்றன.

மனிதன் வேலை செய்வதற்கு சக்தி தேவை. இந்த சக்தி நாம் உண்ணும் உணவிலிருந்து பெறப்படுகிறது. உணவு உற்பத்தியாவதற்கு உள மூல வளங்களின் பங்களிப்பும உண்டு. எனினும், வெப்பநட்பம், மழை, பசளை, நிலத்தின் தன்மை போன்ற ஏனைய காரணிகளின் பங்களிப்பே அதிகம். எல்லா உயிரினங்களையும் போஷிக்கிறாள் அன்னை பூமி. பூமியையும் சேர்த்து போஷிப்பது சூரிய பகவானே. அந்தச் சூரியபகவானில்லையேல் வெயிலில்லை, மழையில்லை, பயிரில்லை, ஏன் உயிரினங்களே இல்லை. எனவேதான் எம்மை உயிர் வாழ வைக்கும் உணவைப் பொங்கி மானசீகமாக சூரியபகவானுக்குப் படைத்து நன்றி உணர்வோடு வழிபாடு இயற்றப்படுகிறது. இதேபோல் உழவுத் தொழிலுக்கும் எமக்கும் எல்லாவழிகளிலும் உதவுகின்ற கால் நடைகளுக்கு அடுத்த தினத்தில் ஓய்வுகொடுத்துக் குளிப்பாட்டி அலங்கரித்து பொங்கிப்படைத்து வழிபாடு இயற்றப்படுகிறது. அவைகளால் மனித இனத்திற்கு ஏற்படுகின்ற நன்மைகள் நினைவு கூரப்படுகின்றன. பிறவற்றிற்கு இதயபூர்வமாக நன்றி செலுத்தி அன்பு கூருகின்ற தன்மை, எம்உடல்பற்றிய தாக்கங்களை மறக்கச் செய்கிறது. அதியுயர்ந்த அன்பு எம்முடலையே மறக்கச் செய்துவிடும். இந்த உயர்ந்த நிலையிலே எம்முன் இருக்கும் தெய்வீகம், ஆற்றல் இலகுவாக வெளிவரக் கூடியதாயிருக்கும். மனித வாழ்விற்கு ஆதாரமாகவிருக்கின்ற விருட்சங்களும் (மரங்களும்) நன்றி கூரப்பட்டது. வழிபாட்டிற்கு உட்படுத்தப்பட்டது. விருட்சங்களின் கீழ் கோயில்கள் அமைந்திருப்பதை இன்றும் நாம் காணமுடியும். இவ்வாறாக வளர்க்கப்பட்ட மனிதம், அன்று காடுகளழிப்பில் விலங்குகள் அழிப்பில் மனிதனை ஈடுபடாமலில் தடுத்திருக்கிறது. இதனால் ஏற்பட்ட உள, உடல் ஆரோக்கியம், சாத்வீகநிலை பரந்த, ஆழமான கூரிய சிந்தனைக்கு மனிதனை இட்டுச் செல்கின்றதனாலேயே பேருண்மைகளைக் கண்டுபிடித்த ஞானிகளாகப் பரிணமிக்கக்கூடியதாகவிருந்தது. இத்தகையவர்களினது இதயத்திலிருந்து வெளிப்பட்டதே ஆயுர்வேத மருத்துவம், யோகாசனம் உட்பட்ட அர்த்தபுஷ்டியுள்ள அனைத்துக் கலைகளும், பக்கவிளைவற்ற நோய் நிவாரணியான யோகாசனக் கலையைக்கண்டு மேற்குலக மருத்துவமும் வியந்து நிற்கின்றது. ஐம்புலன்களுடான அனுபவமே மனிதனிடத்தே சாத்வீக, இராஜஸ, தாமஸ குணங்களின் அளவைத் தீர்மானிக்கிறது. இந்த நவீன உலகிலே ஐந்து புலன்களுடான அனுபவங்கள் இராஜஸ, தாமஸ, குணங்களையே அதிகரிக்கச் செய்கின்றன. அதனாலேயே அக அமைதிக்குலைவு ஏற்படுகிறது. இது புறஅமைதிக்குலைவிற்கு வழிகோலுகிறது. உலக அமைதி ஒவ்வொருவரினதும் அக அமைதியிலேயே சார்ந்திருக்கின்றது. அபிவிருத்தியல்ல. எனவே, உலக அமைதியை விரும்பும் ஒவ்வொருவரும் சூழல்மாசடைதல், போர் உட்பட்ட அனைத்து அனர்த்தங்களும் நீங்க பண்டைய உயர்நத பாரம் பரியங்களை உணர்ந்து கொள்ள இன்றைய பொங்கல் பண்டிகை உதவட்டும். ★

## சாதனை புரிக தையே!

எந்தையும் தாயரும் எழிலுடன் வாழ்ந்த மண்
எங்களின் ஈழ மண்ணில்
முந்தையர் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள்
மூச்சுடன் பொலிந்த மண்ணில்
சிந்தையில் ஏற்றமும் சீர்மிகும் வாழ்க்கையும்
சேமமாம் உரிமை யாவும்
சந்ததம் பொங்கவும் சண்டைகள் நீங்கவும்
சாதனை புரிக தையே!

\- சிற்பி




அன்பர்கள் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்
கூப்முகூர்த்தப்
பட்டுப் புடைவைகள்,
பட்டு வேட்டிகள்,
PURE கோலம் சாறி வகைகள்
புது ரக மனங்கவர் சல்வார் கமிசுகள்,
ஆண்கள், பெண்கள்,
சிறுவர், சிறுமியர் அனைவருக்குமான
ஆடைகளை ஒரே
கூரையின் கீழ்
பெற்றிட....
இப்பொழுது
யாழ்ப்பாணத்தில்...
த. சங்கரப்பிள்ளையும் மைந்தர்களும்
இல.21, சிறப்பு அங்காடி,
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
☎: 222-2826
(C/32548)




நண்பர்கள், வாடிக்கையாளர் அனைவருக்கும்
எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்
நியூ நிறைஞ்சனாஸ்
நகை மாளிகை
அசல் 22 கரட்டில் குறித்த தவணையில்
நம்பிக்கையுடன்செய்து பெற்றிட
யாழ். தலைநகரில்
தலைசிறந்த ஸ்தாபனம்
83/1. கஸ்தூரியார் வீதி. செம்மா தெரு. யாழ்ப்பாணம்
தொலைபேசி : 071-2270458, 077-6070679
(E.S.பேரம்பலம் முன்பாக)
(C/32542)



அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
மங்கையர் மனம் கொள்ளைகொள்ளும் தங்க நகைகளை குறிப்பிட்ட
தவணையில் தரமாகவும் - நியாயமாகவும் பெற்றிட நாடுங்கள்:
சிவமகாலட்சுமி நகை அகம்
(ராஜா தியேட்டர் முன்பாக) 176, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறி முருகன் நகை அகம்
சங்கரத்தைச் சந்தி, சங்கரத்தை.

ஓம் முருகன் நகை மாடம்
இல.5, கைதடிச் சந்தி, கைதடி.
(C/32550)



தித்திக்கும் இனிய பொங்கல் நன்னாளில் அன்பர்கள் அனைவருக்கும்
எமது நல்வாழ்த்துக்கள்!

நவீன அழகிய
சிங்கப்பூர்
நகைகளுக்கு:
சிங்கப்பூர் ஜுவல்லறி
93, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். ☎: 222 3327

(C/32549)

## பொங்கல் வாழ்த்துக்கள்

தரமான சுவையான ஐஸ்கிறீம் வகைகள்,
குளிர்பான வகைகள் என்பவற்றுக்கு
நீங்கள் நாடவேண்டிய சிறந்த இடம்
உங்கள் மனம் கவர்ந்த

**ஸ்ரீ கிருஷ்ணா கிறீம் ஹவுஸ்**

கொடிகாமம் வீதி,
நெல்லியடி

இன்றைய நன்னாளில் எமது இனிய பொங்கல் வாழ்த்துக்களை, எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

உரிமையாளர், ஊழியர்கள்,
ஸ்ரீகிருஷ்ணா கிறீம் ஹவுஸ்.

தொ.பே.இல.021-2263282

(C/32745) (21-19-18-35)


## கற்றல் உபகரணம் வழங்கப்படும்

சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினா சங்க அங்கத்தவர், பணியாளர் ஆகியோரின் கல்விகற்கும் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளனர்.

எதிர்வரும் 24ஆம் திகதி சங்க மண்டபத்தில் சங்கத் தலைவர் மா. கிருஷ்ணன் தலைமையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்படுமென சங்கப பொதுமுகாமையாளர் தெரிவித்தார்.

## தலைமைத்துவப் பயிற்சி வகுப்பு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் மாணவர் தலைவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சி வகுப்புகள் எதிர்வரும் 23ஆம் திகதி சாவகசசேரி இந்துக்கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.(ம-117)

## பொலிஸ் சீருடை விரைவில் மாற்றம்

இலங்கைப் பொலீஸாரின் சீருடையில் விரைவில் மாற்றங்கள் செய்யப்பட உள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கான யோசனைகளை அரசுக்கு முன்வைக்கத் தாம் தயாராக இருப்பதாகப் பொலீஸ்மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்துள்ளார்.

தற்போது பொலீஸாரினால் பயனபடுத்தப்பட்டுவரும் காக்கி நிறச் சீருடை காலத்துக்கு ஒவ்வாதது எனவும் -

இத்தகைய சீருடைகள் ஏனைய நாடுகளில் தவிர்க்கப்பட்டுள்ளதாகவும்- அவர் மேலும் தெரிவித்தார். (ஓ)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமனம்பெற்ற நெல்லியடி, நெல்லை சில்க், நெல்லைக்குமரன் ஸ்தாபன உரிமையாளா

**திரு.சிவக்கொழுந்து அகிலதாஸ்**

அவர்களை தமிழர் திருநாளாம் இத்தைப் பொங்கல தினத்தன்று வாழ்த்துவதில் பேரின்பம் அடைகின்றோம்.

உரிமையாளர்,
ஊழியர்கள்,
ஸ்ரீகிருஷ்ணா கிறீம் ஹவுஸ்.

கொடிகாமம் வீதி,
நெல்லியடி. (C/32744)(21-35-18-19)



அன்பர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

**எமது தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!**

**இதோ!** உங்களுக்காக எங்கள் தயாரிப்புகள்!

- மாளிகை வாயிலைச் சிறப்பிக்கும் மகாராஜா கேற்
- இரும்புக் கேற்
- யன்னல் கிறில்
- பூப்பந்தல்
- சொக்கட்டான் பந்தல்
- உழவு இயந்திரப் பெட்டி
- கலப்பை
- தகரப்பந்தல்

முதலானவற்றைப் பெற்றுக்கொள்ளவும்
சகலவிதமான ஒட்டு வேலைகள், திருத்த வேலைகள்
என்பவற்றைக் குறித்த தவணையில் செய்து
பெற்றுக்கொள்ளவும் இன்றே நாடுங்கள்!

நியாய விலை | குறைந்த கட்டணம்

**அருண் மோட்டோர்ஸ்**

பெரியநாவலடி கண்டிவீதி, கொடிகாமம்.

உரிமையாளர்: அ.நடேசன்

(C/32778) (21-19-18-35)



### பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

தையல், ஐசிங், சிகை அலங்காரம், பூ வேலைகள், தட்டச்சு போன்ற பயிற்சி வகுப்புகள் 21.01.2004 புதன்கிழமை காலை 10.00மணிக்கு ஆரம்பமாகவுள்ளதால் மாணவர்கள் முற்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.

1) ஸ்ரீசாயி நிறுவனம்
K.K.S.வீதி, பெரியமதவடி,
சுன்னாகம்.

2) ஸ்ரீ சாயி நிறுவனம்
மானிப்பாய் வீதி, உரும்பிராய் சந்தி.

(27171)(35-21-19-18)



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 - 10 - 1927



மறைவு 15 - 01 - 2001

**அமரர் கந்தையா மகேசன்**
**திருமதி மகேசன் மாணிக்கம்**

ஆண்டுகள் பல ஓடி மறைந்திட்டாலும்
ஐயா, அம்மாவே அகத்தினில் தெய்வமாய் வாழ்கின்றீர்கள்
நீண்டிடும் நினைவுகள் நெஞ்சினில் சுமந்து வாழ்கின்றோம்
நீங்களிருவரும் நிமலனடியில் நீங்காது வாழ வேண்டுகிறோம்.

*உங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல*
*ஆண்டவரைப் பிரார்த்திக்கின்றோம்.*

பிள்ளைகள்: ம.செல்வரத்தினம், ம.பரிமளசிங்கம (வவுனியா), ம.இராசரத்தினம (ஜேர்மனி), ம.சிறிதரன (சுவிஸ்), ம.ஸ்ரீறங்கன்.

இல.47, நொத்தாரிஸ் லேன்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம். (27139)(35-21-19-18)





# தீந்தமிழர் தைப்பொங்கல்

தைமகளின் வருகை யினால்
தருமம் தழைத் தோங்கி
வையகத்தை வாழ வைக்க
வழுத்திடுவோம் வான் சுடரை

மெய்வருத்தி மேதினியை
மேழியினர் வாழு கின்ற
கைநலத் தினா லலவோ
காசினியே வாழ் கிறது!

நன்றிப் பெருக் குடனே
நல்லதைப் பொங் கலினை
குன்றின் விளக் கொளியாய்
குவலயத்திலே படைப்போம்!

பொச்சாப்பு, பொறாமை போக்கி
பூதலத்தே எந்நாளும்
இச்சையுடன் ஆகுகின்ற
இங்கிதமே எம் படையல்!

வீரம் விளைவு நிலங்கள்
விரிந்த தமிழ் மண்ணின்
தீரத் திலக மதே
தீந்தமிழர் தைப் பொங்கல்!

- கூத்தாடி வீ.சி. குஞ்சிதபாதம்.



# பங்கமறப் பொங்கு தையே; பண்பு தமிழ் ஓங்க!

கதிரோனும் கால்தொட்டு கண் விழித்திட்டோம்
கதிபெங்கள் கலக்கங்கள் கரை யேற்றினோம்
விதியோ பெம்விடையற்ற விளக்கோலங்கள்
உதியாதோ உனைப்போன்ற உயர்வெளிச்சங்கள்

அடிவீழும் அலங்கோலம் அரங்கேறுமோ
விடிவற்ற புகைவாழ்வு விரைந்தேறுமோ
முடிவொன்றும் மூச்சின்றி முற்றுறுதோ
வடிவான கதிரோனே வகை கூறாயோ?

தங்க ஒளி தளைத்து எங்கும்
தரை விழித்து ஆட
சங்கு ஒலி சந்தமுடன்
சரித்திரத்தைப் பாட
எங்குமினி எழில் மிகுந்து
ஏற்ற முயர் காண
பங்க மறப் பொங்கு தையே
பண்பு தமிழ் ஓங்க!

- மானிப்பூர் ரட்ணேஸ்.

# பைந்தமிழர் பொங்கல் திருநாள்

மங்களம் சேர்க்கும் மாசில்லாத் தைத்திங்கள்
எங்கோ வெகுதூரம் ஏகி விலகி நின்ற
செங்கதிரோன் மீண்டும் திரும்பத் தொடங்கும் நாள்?
ஆடிமுதல் தைவரைக்கும் அயராது வயல் வெளியில்
ஓடி உழைத்த மக்கள் ஓய்வுபெறும் முதல்நாள்?
ஆறு திங்கள் பாடுபட்டு அறுத்தெடுத்து நெல்குவிக்கும்
பேறுபெற்ற நற்பயனைப் பேணிக் களித்திடும் நாள்
மங்கையர் மக்கள் மனைத் தலைவர் சுற்றமெல்லாம்
பொங்கிடும் மகிழ்ச்சியுடன் போற்றும் தமிழர் திருநாள்
பூமித் தாய் தந்த புனித மிகும் நெல் மணிகள்
சேமித்து வைத்துச் சிந்தை களித்திடும் நாள்?
தெய்வம் விருந்து ஒக்கல் தென்புலத்தார் அரசுக்கு
மெய்யன்புடன் வழங்கி மிகமகிழ்ச்சி காணும் நாள்
புத்தரிசி குத்திப் புதுப்பானை பொங்கலிட்டுப்
பக்தியுடன் செங்கதிர்க்குப் படைத்துக் களிக்கும் நாள்
மாட்டுக்கும் பொங்கல் வைத்து மனிதர் குணத்தின் பண்
பாட்டை வளர்த்து வரும் பைந்தமிழர் பொங்கல்திருநாள்

- தமிழீழப் பாவலவன்.

# ஆதவனுக்கு படைப்பீர் பொங்கல்

அன்பெனும் பானை ஏற்றி
அறிவெனும் அரிசி இட்டு
பண்பெனும் பாலை ஊற்றி
பகுத்தறிவுப் பாகும் சேர்த்து கண்ணியம்
எனும் அகப்பையாலே
கலந்திதை யோர் பொங்கலாக்கி
மண்ணினைப் பிடித்த பீடை
மறைந்து பொய்யாக என்று
கண்ணெனும் கற்பைப் பேணும்
காரிகையர் ஒன்று கூடி
எண்ணத்தில் அடங்கா வீர
இளைஞரோடு இணைந்து பொங்கி
அன்னையின் விலங்கு ஒடிய
ஆதவனுக்குப் படைத்து வாழி!

- விகடகவி.

# பொங்குக புதுப்பொங்கல்

சொந்த மண்ணில் சொர்க்கம்
விளைந்திட......
வெந்த மண்ணில் குளிர்ச்சி
பாய்ச்சிட......
வர்க்கபேதம் வரண்டு
போய்விட......
தர்க்கம் புரிவோர் தரணியில்
அழிந்திட......
வீழ்ந்தவர் கனவுகள்
பலித்திட.......
புரிந்துணர்வு புதுப்பொலிவு
பெற்றிட......
புதியதோர் உலகம்
படைத்திட......
புதுமகளே தைமகளே - நீ
வருக....வருக......
பொங்குக புதுப்பொங்கல்
தங்குக மங்களம்.......

- எஸ். கவிதரன்.

# ஆனந்தப் பொங்கலாக.......

பாதையுந் திறந்த நல்ல பட்டாசும் பற்றிடவோடு
பானையும் பழங்களோடு பாற்பட்ட எயிட்ஸும் வந்து
ஏனைய பொருள்களும் எம் வன்னியூர் கிடைக்குதிங்கே
ஆனாலும் இயல்பு வாழ்க்கை அடையாத ஏக்கம் தானே?
அண்ணனொடு தம்பி இன்னும் அடிபடும் நிலைகண்டு
கண்ணீரே சிந்துகின்றேன் ஆனையை றோன்றாவாரா?
ஆணை யாருக்குண்டென அடிபிடி நடக்கு தங்கே
'போனை'.... எமக்கேனிந்தப் பொங்கலென்று தோன்றுதிங்கே.

குறைகளில்லாதோரிந்தக் குவலயத்திலுளரோ ஐயா?
நிறைவினைக் கண்டு அவர்கள் திறமையாய் உழைப்பதற்கு
பூனையோ? புலியோ? என்று புதுக்கதை தேவையில்லை
ஒரொலி கேட்கிறது ஒதுங்குவோம் நாங்கள் என்று
பல கட்சி கொண்டு நாங்கள் படுவது போதுமையா
தலைமையில் மோகமின்றி உழைப்பது உண்மை யானால்....
தானையை ஒரு தலைமையாள தமிழர்கள் ஒன்று கூடி
ஆணை கொடுத்தாலே எமக்கு ஆனந்தப் பொங்கலாகும்.

- கவிமணி அன்னைதாஸன்

# சமாதானத்தை தந்துவிடு!

பொற்கதிர் விரிக்கும் 'உதயனுக்கு'
பொலியும் நல்நெற் கதிரெடுத்து
நற்சுவைத் தேனோடு பால்கலந்து
நாவினிக்க நல்ல தமிழெடுத்து
சொற்சுவை பொதிந்த 'பா'வோதி
தைமகளுக்கு இன்பப் படையலிடுவோம்
வித்தகி அவளிடம் விரும்பியொன்று கேட்போம்
இத்தரை யார்தருக்கு தைப்பிறப்போடு - நல் வழிபிறக்க
நிரந்தர சமாதானத்தை தந்துவிடு!

எம்.சுயர்சன்

# எம் வேதனை புரிகின்றதா....?

ஈரம் காயாத விழிகளுடன்
விடியும் நாள்களில் இன்று.....
தைப்பொங்கல்!
ஓலைக்குடிலுக்குள் ஒடுங்கிக் கிடக்கும் தங்களும்....
புதுநெல்லெடுத்துப் புத்தாடை உடுத்தி - ஆனந்தமாய்
புதுப்பானையில் பொங்கியவர்கள் தான்!
ஆனால் இன்றோ.....
மிதிவெடிகள் விளைந்த எம் வயல்களெல்லாம்
மனித உயிர்களை அறுவடை செய்யக் காத்திருக்க.....
பொங்கலுக்காய் கோலமிட்ட வாசலெல்லாம்
இராணுவக் காவலரண்கள் முளைத்திருக்க......
நம்பிக்கை என்ற நாதமிழந்த
நாங்களெல்லாம் அகதிகளாய்......
எதிர்பார்ப்பு எமக்கினி எதுவுமில்லை!!

- சி.சிவகௌரி

# மனதுக்கும், உடலுக்கும் இன்பமளிப்பது பொங்கல்

'மாஸா நாம் மார்கழீ ஷோஸ்மி' 'மாதங்களில் யான் மார்கழி மாத மாக இருக்கிறேன்'. என்றான் கீதாசாரியன். தேவர்களது பகல் காலம் உத்தராயணம். அது தை முதல் ஆனிவரை ஆறுமாதமாகும். சுபகர்மாக்களுக்கு ஏற்றகாலம் அதுவே, இறப்பது கூட அக்காலத்தில் சிறந்தது. மற்ற ஆறு மாதங்கள் தட்சணாயனம். அது தேவருக்கு இரவாம்.

பாரதப் போரில் தட்சணாயனத்தில் அடிபட்ட பீஷ்மர் உத்தராயணம் வரை எதிர்பார்த்து அச்சமயம் உடலை விட்டார். உத்தராயனத்தில் இறந்தவர் (சிறந்த புண்ணியம் செய்தவர்களும் உபாஸகர்களும்) அர்ச்சிராதி மார்க்கம் வழியாக ஸூர்ய மண்டலம் செல்வர். அது தேவயானம் எனப்படும். தட்சணாயனத்தில் இறந்தோர் (கேவலகர்மிகள்) தூமதி மார்க்கமாக சந்திர மண்டலம் செல்வர் அது பித்ருயானம் எனப்படும்.

தட்சணாயனத்தில் கடைசி மாதம் மார்கழி மாதம். தனுர் ராசியில் சூரியன் பிரவேசிப்பதால் இதை தனுமாதம் என்றும், மிருகசீரிட நட்சத்திரத்தில் பௌர்ணமி வருவதால் மார்க்கசீர்ஷம் என்றும் அழைப்பர். இது தேவர்களுக்கு உச்சகாலம். உஷக் காலத்தில் எவரும் உறங்கக் கூடாது. தேவர்களுக்கும், பித்ருக்களும் சந்தோஷமாய் நடமாடும் காலம் அது. அச்சமயம், விழித்திருப்போருக்கு தேவர் அருளும் பித்ருக்கள் பிரசாதமும் உண்டாகும்.

பொதுவாக எல்லா உஷ காலமும் புண்ய காலமாகும். தேவர்களின் உஷ காலமான தனுர் மாதத்தின் உஷ காலம் மிக மிகச் சிறந்தது. அச்சமயம் தேவர்களுக்கும் (பிரதானமாக) சிவபெருமான், விஷ்ணுவுக்கும் பூஜை செய்தால், ஒரு நாள் செய்யும் பூஜையே நூறு ஆண்டுகளுக்கு பூஜை செய்த பலனைத் அளிக்கவல்லது. அக்காலத்தில் பொங்கல் நிவேதனம் செய்யவேண்டும்.

பொங்கல் என்பது முத்கான்னம் எனப்படும். அதாவது, பயிற்றம் பருப்பும் அரிசியும் சேர்ந்தது. அது ஸாத்விகமான தேவர்களுக்குரிய அன்னம். பித்ருக்களுக்கு பிரியமானது பயற்றம் பருப்பு. ஆதலால் பயற்றம் பருப்பையே சிரார்த்தத்தில் சேர்ப்பர். துவரம் பருப்பை சேர்க்கமாட்டார்கள். மார்கழி மாதம் முழுநாளும் பொங்கல் நிவேதனம் செய்து பூர்த்தி செய்வது பெரும் பொங்கலாம். இடையில், ஆண்டாள் திருப்பாவை முறையைப் பின்பற்றி கூடாரவல்லியில் மிக மதுரமான சர்க்கரைப் பொங்கல் கனிவுடன் கண்ணனுக்கு அளிக்கப்படும்.

நல்ல காலமான தை மாத ஆரம்பத்தில் செடி கொடிகளெல்லாம் பூத்துக் காய்த்து கனிந்து உலகிற்கு இன்பவெள்ளத்தைப் பெருக்கும். இன்பத்தால் அனைவர் உள்ளமும் பொங்கும். இது பேரின்பத்திற்கும் துணையாம். பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய் கிடக்குது எனத் தாயுமானவர் வர்ணிக்கின்றார். இறைவனுக்குப் பொங்கல் அளித்துப் பூர்த்தி செய்யும் பொங்கல், செடி கொடிகளது இன்பப் பொங்கல் தேவர்களுக்கு இராக் காலமின்று பொழுது புலர்ந்தது என்ற பொங்கல், மானிடர் மனதுக்கும் உடலுக்கும் உயிருக்கும் பல வகையில் இன்பமளிக்கும் பொங்கல் எல்லாம் சேர்ந்து பெரும் பொங்கலாம். பொங்கலோ பொங்கல் என சிறுவர் கூவி பொங்கலை கொண்டாடுவர்.

வேதாகமமாமணி
சிவஸ்ரீ வை. மு. பரமசாமிக் குருமணி
உத்தரகோவை

# உதயனுக்கு நன்றி!

களத்தினில் பணிகள் ஆற்றிக்
காசினி காக்கும் உழவன்
வளத்தினைப் பெருக்கப் பரிதி
வழங்கிய உதவி யாலே
உளத்தினில் உவகை கொண்டு
உதயனை நன்றியோடு
வழுத்தியே அமுது பொங்கி
வணங்கிடும் திருநாள் அம்மா!

- நாயன்மார்கட்டு ப. மகேந்திரதாசன்.

# புதிய தையே, வழிகாட்டு

தைமகளே! நல்விடிவைத்தர வா மகளே!
தையலே உன்வரவால் தீவினை ஓட்டிடு மகளே!
தைப்பொங்கல் பல கண்டோம் எம்வாழ்வு பொங்கவில்லை
தைரியம் நீ தந்திடுவாய் தமிழர் சிறப்பு ஓங்கிடவே

நிந்தைக் கிலக்கானோம் நீள்துயரால் துவண்டிட்டோம்
சிந்தை தடுமாறி சீரழிந்து அலைந்திட்டோம்
விந்தை பலகாட்டி எம்விடிவுக்கு தடைபோட்டு
பந்தை அடிக்கின்றார் இனவாத அணித் தலைவரிங்கு

மந்தை போல் நாம் சிதறி பெலமிழந்து வாழுவதா?
கந்தையை கட்டினாலும் மண்டியிட்டு வீழுவதா?
எந்தையர் வளர்ந்து வந்த நற்றமிழிங்கு அழிவதா?
புதிய தையே வழிகாட்டு எம்விடிவை நிலைநாட்டு.

- எஸ்.யேசுதாஸ், கொழும்புத்துறை

## இலவச கணனிப் பயிற்சி

யாழ்ப்பாணம்,ஜன.15

மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் என்ற அமைப்பு வறுமைக கோட்டிற்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான இலவச கணனி பயிற்சியினை நடத்தவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புவோர் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் சுயவிவரத்துடன் அடங்கிய விண்ணப்பத்தை மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும், ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அதன் மேலதிக ஆணையாளா கேட்டுள்ளார்.

(ம-ரி)

## கிராம வீதிகளிலும் பொலீஸ் ரோந்து

தெல்லிப்பழை,ஜன.15

வலிகாமம் பகுதியில் இரவுவேளைகளில் பொலீஸார் முக்கிய வீதிகளில மட்டுமன்றி கிராம வீதிகளிலும் தற்போது ரோந்து சுற்றி வருகின்றனர். இப்பகுதியில் குற்றச்செயல்கள் அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம் என்று பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ். வீரசிங்க தெரிவித்தார்.

"சுன்னாகம் பொலீஸ் நிலையக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இரவு வேளைகளில் குற்றச்செயல்கள் அதிகரித்து வருவதாக முறைப்பாடுகள் தெரிவிக்கின்றன. அதனாலேயே நாம் ரோந்துப் பணிகளை அதிகரித்துள்ளோம்" - என்று அவர் கூறினார்.

பிரதான வீதிகளில் மட்டுமன்றி, கிராமங்களுடாகச் செல்கின்ற முக்கிய வீதிகளில் எல்லாம் இரவு 9.00 மணி தொடக்கம் அதிகாலை 4.00 மணி வரை பொலீஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனவே பொது மக்கள் இரவில் ஏதேனும் அச்சமூட்டும் நடவடிக்கைகளுக்குட்பட்டால் தாமதமின்றி அருகில் ரோந்துப் பணியில இருக்கும் பொலீஸாருக்குத் தெரிவித்து உரிய பாதுகாப்பு நடவடிக்கையினைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

(ம-150)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



### பி.எல்.பற்றிக்

மறைவு 16-12-2003

அன்னாரின் மறைவையொட்டி எமக்கு பல்வேறு வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அன்னாரின் ஆத்மசாந்திக்காக இன்று (15-01-2004) வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு பம்பலப்பிட்டி கிளிபட் பிளேஸிலுள்ள நிர்மலா சிற்றாலயத்தில் (ஜெஸ்லிட் சிற்றாலயம்) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

*37,Kinross Av.,*
*Colombo-4.*

MRS.R.PATRICK AND FAMILY.

(சி-32785)(21-26-19)

## 4ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 1938 - 03 - 06



மறைவு 2000 - 01 - 28

### அமரர் காசிப்பிள்ளை சிதம்பரப்பிள்ளை

திதி:15.01.2004

அன்பின் ஒளிவிளக்கே! பாசத்தின் உறைவிடமே!
ஆண்டுகள் நான்கு புரண்டாலும் ஆறாதப்பா
உங்கள் நினைவுகள்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரதான வீதி,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

பிரிவால் துயருறும்:
- குடும்பத்தினர்.

(27170)(35-21-19-26)


## தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்



★ சர்வதேச விமான பயணச்சீட்டுக்கள்
★வெளிநாட்டு hotel பதிவுகள்
★விமான நிலையத்திலிருந்து தங்குமிடங்களுக்கும் தங்குமிடங்களில் இருந்து விமானநிலையங்களுக்குமான போக்குவரத்து வசதிகள்



மேற்படி ஒழுங்குகளை இங்கிருந்தவாறே மேற்கொள்ளும் வசதியைப் பெற

COSMOS TOURS AND TRAVEL
200, K.K.S ROAD JAFFNA
T.P 021 222 5461

(C/32777)



## தைத்திருநாள் வாழ்த்துக்கள்!




எஸ்-லோன் லங்கா (பிரைவேட்) லிமிடட்
இல. 7, பிரேபுறுக் பிளேஸ், கொழும்பு—02.
தொ.பேசி: 4 792630—4, 5 333273.
தொ.மடல்: 5 352741.
மின் அஞ்சல்: slonsales@slon.maharaja.lk

எஸ்-லோன் யாழ் விநியோகஸ்தர்கள்.
ஜெசிபா ஏஜென்சி,
275, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி: 021 222 5950.



# உஸ்பெகிஸ்தான் விமானம் நொறுங்கியது!

# ஐ.நா. அதிகாரி உட்பட 37 பேர் உயிரிழப்பு!!

ராஸ்கென், ஜனவரி15

**உஸ்பெகிஸ்தான் தலைநகர் ராஸ்கென்ரில் பயணிகள் விமானம் ஒன்று வீழ்ந்து நொறுங்கியதில், ஐ.நா.சபை மூத்த அதிகாரி ரிச்சேர்ட் கொன்றோய் உட்பட அதிலிருந்த 37 பேரும் உயிரிழந்தனர்.**

**உள்ளூர் நேரப்படி நேற்றுமுன்தினம் இரவு 11.30 மணியளவில் இந்த விமானம் விபத்துக்குள்ளாகி வீழ்ந்து நொறுங்கியது.**

தென்பகுதி நகரான ரெகஸில் இருந்து தலைநகர் ராஸ்கன் சர்வதேச விமான நிலையத்திற்கு வந்து கொண்டிருந்த 'எ.ஜாக்-40' ரக பயணிகள் ஜெட் விமானமே வீழ்ந்து நொறுங்கியது என்று உஸ்பெகிஸ்தான் அரசு நேற்று அறிவித்தது.

தரையிறங்குவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் தரைகட்டுப்பாட்டு நிலையத்துடனான தொடர்புகளை விமானம் இழந்திருந்தது என்றும் -

அடுத்த சில விநாடிகளிலேயே அது தரையில் வீழ்ந்துவிட்டது என்றும் - ராஸ்கென்ட் சர்வதேச விமான நிலைய தரைக்கட்டுப்பாட்டு நிலைய அதிகாரி தெரிவித்திருக்கிறார்.

விமானம் வீழ்ந்ததற்கு சீரற்ற வானிலையே காரணம் என்று முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

32 பயணிகளையும், 5 விமான ஊழியர்களையும் ஏற்றிச்சென்ற இந்த விமானம், 1966 ஆம் ஆண்டு முதல் சேவையில் ஈடுபட்டு வந்தது.

நள்ளிரவில் விமானம் விபத்துக்குள்ளானதால், அது வீழ்ந்து நொறுங்கிய இடத்தை மீட்புப் பணியாளர்களால் உடனடியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. அடுத்தநாள் காலையிலேயே விமானம் வீழ்ந்த பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. ஆப்கானிஸ்தான் - உஸ்பெகிஸ்தான் எல்லையில் உள்ள மலைப்பகுதியிலேயே விமானம் வீழ்ந்தது.

விபத்து நடந்த இடத்தை உஸ்பெகிஸ்தான் ஜனாதிபதி இஸ்லாம் ஹரிமூவ் நேரில்சென்று பார்வையிட்டார். அங்கு, இராணுவத்தினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களில் 27 பேரின் சடலங்கள் இது வரை மீட்கப்பட்டுள்ளன. தொடர்ந்து மீட்புப் பணி நடைபெறுகிறது.

விமான விபத்து குறித்து அறிந்ததும், அதில் பயணித்தவர்களின் உறவினர்கள் ராஸ்கென்ற் விமான நிலையத்தில் கூடினர். இதனால், அங்கு பரபரப்பு காணப்பட்டது.

இந்த விபத்தில் கொல்லப்பட்ட ஐ.நாவின் மூத்த அதிகாரி ரிச்சர்ட் கொன்றோய்க்கு, ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் இரங்கல் தெரிவித்தார். விபத்து நடந்த இடத்திலிருந்து அவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

56 வயதுடைய கொன்றோய், ஐ.நா. அபிவிருத்தித் திட்ட அதிகாரிகளில் ஒருவராகப் பணியாற்றி வந்தார். ஆஸ்திரேலியா, பிரிட்டன் ஆகிய நாடுகளை ஐநாவுடன் ஒருங்கிணைக்கும் பொறுப்பு இவரிடமே விடப்பட்டிருந்தது. (ஒ)

## மெக்ஸிக்கோவில் நில நடுக்கம்

மெக்சிக்கோ தலைநகர் மெக்சிக்கோ சிற்றியில் நேற்றுமுன்தினம் இரண்டு முறை நிலநடுக்கம் ஏற்பட்டது.

உள்ளூர் நேரப்படி பிற்பகல் 1.50 மணியிலிருந்து 3.30 மணிக்கு இரு முறை நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவுகோளில் முறையே 5.1 மற்றும் 5.8 என பதிவானது. சேத விவரம் குறித்து உடனடித் தகவல் இல்லை. (ஒ)

## பெர்னாண்டஸ் பயணித்த கார் லொறியுடன் மோதி விபத்து!



இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் நேற்றுமுன்தினம் இரவு வாகன விபத்தில் சிக்கிக் காயமடைந்தார். பீஹார் மாநிலம் ஹில்சா என்ற இடத்தில் இடம்பெற்ற பொதுக்கூட்டம் முடிந்ததும் ராஜகிர் என்ற இடத்துக்கு பெர்னாண்டஸ் காரில திரும்பிக்கொண்டு இருந்தார். அவரது கார் அப்போது வீதி ஓரத்தில் நின்ற ஒரு லொறி மீது மோதியது. பனி மூட்டம் காரணமாக இந்த விபத்து நடந்தது.

இதில் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் பயணித்த கார் பலத்த சேதம் அடைந்தது. அவரது தலையிலும், காலிலும் காயம் ஏற்பட்டது. உடனடியாக அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டது. ராஜ்கிர் சுற்றுலா விடுதியில் அவருக்கு மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர். ஆனாலும், அவருக்குத் தலையிலும், காலிலும் வலி ஏற்பட்டது. இந்த வலியுடன் ராஜ்கிர் பகுதியில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் அவர் கலந்துகொண்டார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு பெர்னாண்டஸ் ரயில் மூலம் பாட்னா சென்று அங்குள்ள ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். இந்த விபத்தில் ஜோர்ஜ் பெர்னாண்டஸின் கார்ச் சாரதிக்குப் பலத்த காயம் ஏற்பட்டது. உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ள சாரதிக்கு பாட்னா ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## செவ்வாயில் தண்ணீர்: நாஸா மையம் ஊர்ஜிதம்

செவ்வாய் கிரகத்தில் தண்ணீர் இருப்பதற்கான ஆதாரம் கிடைத்திருப்பதாக நாஸா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

செவ்வாயில் வெற்றிகரமாகத் தரையிறங்கிய ஸ்பிரிட் ஆய்வுக்கலம் அங்குள்ள தரைத்தோற்ற அமைப்புக்களை தொடர்ந்து படம்பிடித்து பூமிக்கு அனுப்பிவருகிறது.

அந்தப்படங்களின் அடிப்படையில் பார்க்கும் போது, செவ்வாயில் தண்ணீர் இருப்பதற்கான சாத்தியம் உண்டு என்று விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

"ஆய்வுக்கலம் தரையிறங்கிய பகுதி வறண்ட பிரதேசமாகக் காட்சி அளிக்கிறது. ஒருகாலத்தில் அந்த இடத்தில் நீண்ட ஆழமான ஆறு ஓடியிருக்கலாம். ஆய்வுக் கலம் தோண்டிய பகுதியில் சகதி போன்ற மண் பொருள் கிடைத்திருக்கிறது. உடைந்த பாறைகள் மற்றும் ஈரப்பதம் கொண்ட துகளைகள் அந்த மண் பொருளில் காணப்படுகின்றன" - என்று ஆய்வுக்கலம் அனுப்பும் படங்களை ஆராய்ந்து வரும் விஞ்ஞானிகளில் ஒருவரான தொம்சன் தெரிவித்திருக்கிறார். "வரலாற்றின் ஒரு கட்டத்தில் அங்கு தண்ணீர் இருந்திருக்கலாம் என்பது உறுதியாகிவிட்டது. ஆய்வுக்கலத்தின் முதற் கட்டப்பணிகள் தற்போது முடிந்துவிட்டன".

- என்று அந்த ஆய்வுக் கலத்தின இயந்திரப் பிரிவு விஞ்ஞானி ஒருவர் தெரிவித்திருக்கிறார். (ஒ)

## காஸா பல்கலை. மாணவி தற்கொலைத் தாக்குதல்!

ஜெருசலேம், ஜன.15

காஸா பள்ளத்தாக்கில் பலஸ்தீன தற்கொலைப் போராளி நடத்திய குண்டுத்தாக்குதலில் நான்கு யூதர்கள் கொல்லப்பட்டனர்; பத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

சுமார் ஒருமாதத்திற்குப் பின் தற்கொலைப் போராளி ஒருவர் தாக்குதல் நடத்தியிருப்பதை அடுத்து இஸ்ரேலுக்கும், பலஸ்தீனத்துக்கும் இடையே மீண்டும் வன்முறை வெடிக்குமென அஞ்சப்படுகின்றது.

பலஸ்தீனப் பல்கலைக்கழக மாணவி ஒருவரே இந்தத் தாக்குதலை நடத்தினார் என்றும் -


அவரது சகோதரர்களை இஸ்ரேலியப்படையினர் கொன்றதற்குப் பழி வாங்கவே அவர் இத்தாக்குதலை நடத்தினார் என்றும் - பலஸ்தீன வட்டாரங்கள் தெரிவித்தன.

இஸ்ரேலிய எல்லைப் பகுதியில் - காஸாப் பள்ளத்தாக்கில் உள்ள நிலப்பரப்பில் குடியேறியிருந்த யூதர்களைக் குறிவைத்தே இந்தக் குண்டுத் தாக்குதல் நடந்திருக்கிறது.

இந்தக் குண்டுத் தாக்குதலுக்கு இதுவரை எந்த இயக்கமும் பொறுப்பேற்கவில்லை. ஆயினும், பலஸ்தீன நிர்வாகத்தை இஸ்ரேலிய அரசு கடுமையாகச் சாடியுள்ளது.

பலஸ்தீனத்தில் புதிதாகப் பதவியேற்ற பிரதமர் குரே, போராளிக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதாக உறுதி அளித்திருப்பினும், அதற்கான நடவடிக்கைகள் எதனையும் அவர் மேற்கொள்ளவில்லை என்று இஸ்ரேல் குற்றஞ்சாட்டியுள்ளது.

எனவே, போராளிக் குழுக்களைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை தமது படை விரைவில் மேற்கொள்ளும் என்றும் அது சூளுரைத்திருக்கின்றது. (ஒ)



காஸாவின் காயமடைந்த ஒருவர் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப் படுகிறார்.

## நெதர்லாந்துப் பாடசாலையில் மாணவன் சுட்டு ஆசிரியை பலி!

ஹேக், ஜன.15

நெதர்லாந்தில் மாணவன் ஒருவன் துப்பாக்கியால் சுட்டதில் ஆசிரியை உயிரிழந்தார். ஹேக் நகரில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தப் பாடசாலையில் கணக்கியல் பாடம் கற்பிக்கும் ஆசிரியையே சுடப்பட்டு இறந்தவராவார்.

தன்னிடம் கல்விகற்கும் உயர்தர வகுப்பு மாணவனை இந்த ஆசிரியை கண்டித்தார் என்றும் - பின்னர் பாடசாலைச் சிற்றுண்டிச்சாலையில் ஆசிரியை நின்று கொண்டிருந்தபோது, அங்கு வந்த சம்பந்தப்பட்ட மாணவன் துப்பாக்கியால் ஆசிரியையின் தலையில் சுட்டான் என்றும் - நேரில கண்டவர்கள் தெரிவித்தனர். சூட்டுக்காயத்துக்குள்ளான ஆசிரியை மருத்துவமனைக்கு எடுத்துச்செல்லப்பட்ட வழியில் மரணமானார். துப்பாக்கியால் சுட்ட மாணவன் இந்தச் சம்பவம் இடம்பெற்ற சிறிது நேரத்தில் பொலீஸாரிடம் சரணடைந்தான்.

பாடசாலை ஒன்றில் துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற சம்பவம் நெதர்லாந்தில் முதல்முறையாக 5 வருடங்களுக்கு முன்னர் நடந்தது. அதில் மாணவன் ஒருவன் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் சகமாணவர்கள் 5 பேர் காயமடைந்தனர்.

இதேசமயம், நெதர்லாந்தில் 50 சதவீதமான ஆசிரியைகள் மாணவர்களின் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் - அவர்களில் 50 பேருக்கு ஒருவர் மாணவர்களால் உடல் ரீதியான தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்றும் - கூறப்படுகிறது.

பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு ஆசிரியர் சங்கங்கள் நெதர்லாந்து அரசிடம் கோரிவருகின்றன.

## 'ஆகாஷ்' ஏவுகணை சோதனை வெற்றி!

புதுடில்லி, ஜன.15

தரையிலிருந்து விண்ணில் செல்லும் 'ஆகாஷ்' ஏவுகணையை விண்ணில் செலுத்தி இந்தியா சோதனை நடத்தியது. ஒரிஸாவில் உள்ள பலாசூரியிலிருந்து 13 கி.மீ. தொலைவில் உள்ள சந்திப்பூர் கடறபகுதியில் நடமாடும் செலுத்து வாகனம் மூலம் நேற்றுமுன்தினம் இந்திய நேரப்படி காலை 1152 மணியளவில் இச்சோதனை நடத்தப்பட்டது.

இது முற்றிலும் உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டது. பல்வேறு இலக்குகளைத் தாக்கக்கூடிய இந்த ஏவுகணை, 50 கிலோ வெடிபொருள்களை சுமந்து செல்லக்கூடியது. அதேசமயம், நகரும் இலக்குகளையும் தாக்கக்கூடிய வல்லமை பெற்றது 'ஆகாஷ்'. 650 கிலோ எடை கொண்ட இந்த ஏவுகணை, 25 கி.மீ. தொலைவு வரை சென்று எதிரியின் இலக்குகளைத் தாக்கவல்லது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் சமீபத்தில் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ள 5 வகையான ஏவுகணைகளில் இதுவும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

## திருப்பதிக்கு ஒரேவாரத்தில் 32 கிலோ தங்கம்

பள்ளிப்பட்டு, ஜன.15

திருப்பதி வெங்கடாஜலபதி கோயிலுக்கு பக்தர்கள் விலை உயர்ந்த நகைகளை காணிக்கையாக வழங்குவது வழக்கம்.

புதுவருடம் பிறந்ததையொட்டி கடந்த ஒரு வார காலமாக ஏராளமான பக்தர்கள் தங்க நகைகளை ஏழுமலையானுக்குக் காணிக்கையாக வழங்கயுள்ளனர்.

இதன் மூலம் கோவிலுக்கு கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 32 கிலோ தங்க நகைகள் காணிக்கையாகக் கிடைத்துள்ளன.

## ஈராக் பொலீஸ் நிலையம் தகர்ப்பு!

பக்தாத், ஜன.15

ஈராக்கியத் தலைநகர் பக்தாத்தின தென்பகுதியில் அமைந்திருந்த பொலீஸ் நிலையத்தின் ஒருபகுதி கார்க் குண்டுத் தாக்குதலில் தகர்ந்தது.

மூன்று ஈராக்கியப் பொலீஸார் இதில் கொல்லப்பட்டனர்; இருபதிற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

பக்குவா நகரில் அமைந்திருந்த பொலீஸ் நிலையமே தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது.

நேற்றுக்காலை இத்தாக்குதல் இடம்பெற்றது. வேகமாக வந்த கார் ஒன்று பொலீஸ் நிலைய வெளிப் புறச் சுவருடன் மோதியதையடுத்து, அந்தக் கார் வெடித்துச்சிதறியது.

சம்பவ இடத்திற்கு உடனடியாக அமெரிக்கப்படை விரைந்தது. மீட்புப் பணிகளுக்காக, அப்பகுதியை உடனடியாக படையினர் சீல் வைத்தனர்.

உலக அரங்கில்

"உயிரிழந்தவர்களில் பொது மக்களும் அடங்குவர். காயமடைந்த பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது" - என்று ஈராக்கிய பொலீஸ அதிகாரியான ஹைடர் இஸ்மாயில் தெரிவித்தார்.

இத்தாக்குதலில் இரண்டு பேர் மட்டுமே உயிரிழந்தனர் என்றும் 14 பேர் படுகாயமடைந்தனர் என்றும் அங்குள்ள பி.பி.ஸி. நிருபர் அலெஸ் ரெயர் தெரிவித்துள்ளார்.

குண்டுத் தாக்குதலுக்கு இலக்கான பொலீஸ் நிலையம் கடந்த மாதம்தான் திறக்கப்பட்டது.

இதற்கிடையே -

ஈராக்கிய முன்னாள் அரசிலிருந்த - இதுவரை கைதுசெய்யப்படாதவர்களைத் தேடும் பணியை அமெரிக்கப்படை தீவிரப்படுத்தியுள்ளது.

## ஈராக் குறித்து பாப்பரசர் கருத்து

ஈராக்கியர்கள் தமது நாட்டில் ஊடுருவியுள்ள ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து விடுதலை பெற விரும்புகின்றனர் என்று பாப்பரசர் ஜோன் போல் தெரிவித்திருக்கிறார்.

வத்திகான் திருச்சபையில் வருடாந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

ஈராக்கில் போர் வெடிப்பதைத் தவிர்க்க கத்தோலிக்க திருச்சபை எண்ணற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டது. இருப்பினும், அங்கு போர் வெடித்தது. இது கத்தோலிக்க திருசசபைக்கு மிகுந்த மன வேதனையை அளித்திருக்கிறது.

தற்போதைய தேவை சர்வதேச சமுதாயம் ஈராக்கிற்கு உதவவேண்டுமென்பதே. அதன் மூலம் அந்நாட்டின் வளர்ச்சிக்கு வித்திடமுடியும். ஜனநாயக ரீதியிலான பொருளாதார முறையை, ஈராக்கியர்களின் விருப்பதிற்கு இணங்க அங்கு ஏற்படுத்த வேண்டும். அப்போதுதான், சர்வதேச சமுதாயத்தில் ஈராக்கியர்கள் பங்கேற்கமுடியும். போர் மூலம் ஒரு நாட்டுப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது என்பதை அமெரிக்கா புரிந்து கொள்ளவேண்டும் - என்று அவர் மேலும் கூறினார்.



பொங்கும் மங்கலம்
எங்கும் தங்கட்டும்!

தை மாதப் பிறப்பு.
சூரியன் மகர ராசியிலே பிரவேசிக்கும் "மகர சங்கிராந்தி" நாள். உயிர்கள் உயிர்வாழ ஒளிவிசும் சூரியனுக்கு நன்றி தெரிவித்துப் பொங்கலிட்டு வணங்கும் பெருநாள்.
உலகிற்கு உணவளிக்கும் உழவர் தம் திருநாள்.
'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கை பிறக்கும் பொன்னாள்.

இன்று பொங்கி வழியும் பால் போலவே என்றும் உங்கள் இல்லங்களில் அன்பு, அமைதி, செல்வம், வளங்கள் பொங்கிப் பூரிக்க வாழ்த்துகிறோம்.

HNB

HNB Your Partner In Progress

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD.


# சமுர்த்தி அதிகார சபையை மூடிவிட அரசு முயற்சிக்கிறது!

## அலுவலர் சங்கம் குற்றச்சாட்டு

சமுர்த்தி அதிகார சபையை மூடுவதற்கு அரசு முயற்சி செய்கிறது என சமுர்த்தி அலுவலர் சங்கம் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

இது குறித்து சங்கத்தின் தலைவர் ஜெகத் குமார தெரிவித்ததாவது:-

அரசு தன்னிச்சையாக சமுர்த்தி அதிகார சபையினை மூடுவதற்குத் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் சமுர்த்தித் திட்டத்தையும் நாட்டிலிருந்து முற்றாக நீக்கிவிடுவதற்கு அரசு திரை மறைவில் சதி செய்கிறது.

இதன்மூலம் நாட்டில் வறிய மக்களின் தொகை மேலும் அதிகமாகும் அபாயம் ஏற்படும் என்று கூறினார். (ஒ-4)


**FASHION BEAUTY CORNER**
(FOR LADIES)
(நவநாகரிக நங்கையின் இருப்பிடம்)

எமது வாடிக்கையாளர்களுக்கு புத்தாண்டு தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

Facial, Bridal Dressing and part makeup, Birthday cake and Structure, Waxing and Threading, Bleaching, Hair dye and colour dye, Henna Treatment, permanent straighting, Rich cake, vegetable and Normal cakes

- Short eats orders will be undertaken
- February முதலாம் திகதி வகுப்புகளில் சேர விரும்புவோர் முன் கூட்டியே பதியவும் ~ போதிய விவரங்களுக்கு நேரில் வரவும்.

**Mrs.Jeyarani Gajendran**
14, Amman Road, Kandermadam, Jaffna.
T.P.NO -2226864
(C/32738)(35-21-18-19)


## துயர் பகிர்கின்றோம்

சாவகச்சேரி, கண்டுவில் ஒழுங்கையைச் சேர்ந்த
எமது ஆலய முன்னாள் செயலாளரும், உப தலைவருமான
திரு.ப.நடராசா அவர்களின் அன்பு மாமியாரும்,
எமது **பூவேந்தன்** பகல் பராமரிப்பு இல்ல நிர்வாகக்
குழுவின் நிர்வாக சபை உறுப்பினரான
திருமதி சிவமணி நடராசா
அவர்களின் அன்புத் தாயாருமான
**திருமதி அன்னம்மா ஆண்டிஐயா**
அவர்களின் மறைவால் நாமும் துயர் பகிர்வதுடன், அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்.

டச் வீதி,
சாவகச்சேரி.

*அருள்மிகு ஸ்ரீபழனி ஆண்டவ பரிபாலன சபை.*

(27177)(21-18-19)


# வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்

## வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கணனிகள் உலகப்புகழ் பெற்ற Dell, HP, Compaq போன்ற சிறந்த நிறுவனங்கள்

15" Digital Monitor- 5,500/=
19" Digital Monitor- 9,900/=
21" Digital Monitor- 21,000/=



| Motherboard | Processor | RAM | Hard Disk | with 14" Monitor |
|---|---|---|---|---|
| Pentium I | 166 MHz | 32MB | 1.6GB | 10,900 |
| Pentium I | 200 MHz | 32MB | 2.4GB | 11,900 |
| Pentium I | 233 MHz | 32MB | 2.4GB | 12,900 |
| Pentium II | 266 MHz | 32MB | 3.2GB | 13,900 |
| Pentium II | 300 MHz | 64MB | 3.2GB | 14,900 |
| Pentium II | 350 MHz | 64MB | 3.2GB | 16,900 |
| Pentium II | 400 MHz | 64MB | 3.2GB | 18,500 |
| Pentium II | 450 MHz | 64MB | 3.2GB | 20,900 |
| Pentium III | 450 MHz | 128MB | 4.3GB | 23,900 |
| Pentium III | 450 MHz | 128MB | 8.4GB | 27,500 |
| Pentium III | 450 MHz | 128MB | 13.6GB | 28,500 |

All above configuration include soundcard, CD ROM, Floppy Drive, Keyboard, network card, Mouse and pad

DREAM STATION

# Cheapcom Private Limited

CHEAPCOM (PVT) LIMITED C Kwality @ lo-cost

**Campus Junction**
**Palaly Road, Thirunelvely,**
**Jaffna.**
**Tel:021-222 7474**
Hot line: 077 766 1216

**Head office:**
7-1/4A, Orchard Shopping Complex,
Galle Road, (opp. Savoy Cinema)
Wellawatte.
Tel: 011 250 8870, Fax: 011 236 1248

**இன்றைய வெளியீடு**

வாடிக்கையாளர் அனை
வருக்கும் தைப்பொங்கல்
வாழ்த்துக்கள்

NEW MP3 VCD
SONGS

- எனக்கு 20 உனக்கு 18
- பூட்
- சூரி

மூர்த்தி வீடியோ சென்ரர்
மானிப்பாய்
(சி-32789)(32)

யசோ
இறபர் ஸ்டாம்

பொலிமர்
கொம்பியூட்டர்
இறபர் சீல்
ரூ. 75/=
மட்டுமே!

யசோ (பி.வி.ரி.) லிமிட்டட்,
35, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம். (27181)(36)

லிபேட்டி அச்சுவேலி

எமது ரசிகர்களுக்கு
பொங்கல் வாழ்த்துக்கள்
இன்று -பொங்கல் சிறப்புக்காட்சி -
பிரசாந் நடித்த
"வின்னர்" (ரீல்ஸ்)
தினசரி : 2.00, 7.00.
சனி, ஞாயிறு : 11.00, 2.00, 7.00 (பி.நே.)
(C-32371) (32)

ராஜா யாழ்ப்பாணம்

எமது ரசிகர்களுக்கு
பொங்கல் வாழ்த்துக்கள்
இன்று முதல்
பிரசாந் நடித்த
ஜேசூப் (ரீல்ஸ்)
காட்சி நேரம்:10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(சி-32369) (32)

Edexcel
International, UK

NEW BATCH STARTS ON 23.01.2004

BTEC
HND
World Class Qualification

Delivered Locally
Recognised Globally

Institute of Informatics Studies (IIS)
# 100, Clock Tower Road, Jaffna. TP No. 021 222 2831

நிகில்ஸ் சுன்னாகம்

எமது ரசிகர்களுக்கு
பொங்கல் வாழ்த்துக்கள்
இன்று முதல் இந்தியாவிலும் இலங்கையிலும்
ஒரே தின வெளியீடான
கமல், அபிராமி, நெப்போலியன், நாசர் நடித்த
E.A.P இன் பொங்கல் வெளியீடு
விருமாண்டி (சண்டியர்) (ரீல்ஸ்)
காட்சி நேரம்:10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
ஆசனப்பதிவுகளுக்கு ரட்ணம்ஸ்
யாழ்ப்பாணம்
T.P.: 021-222 2917
நாகம்ஸ் பாட்டா-சுன்னாகம்
T.P: 060 221 2779
வீடியோ ஆனந் - மானிப்பாய்
T.P.: - 021-2222889
நாகம்ஸ் திரை அரங்கம்,
சுன்னாகம்.
(C-32739)(32)




# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 14 - 11 - 1913



மறைவு: 25 - 01 - 2003

அமரர்

## C.M. பொன்னையா இராமநாதன்

(Retd Shroff, Mercantile Bank)

அய்யா நீங்கள் அமரத்துவம் அடைந்து
மெய்யாக ஓராண்டு மெதுவாகப் போனதுவோ!
செய்யவள் பாகத்திறைவன் திருவடிக்கீழ்
உய்யும் வகையால் உய்திதான் பெற்றீரோ
நொய்ய எம் உள்ளம் உமையெண்ணி ஏங்குதையா!
வெய்ய இப்பிறவியில் மறவாதே நினைத்திருப்போம்.

கல்லூரி ஒழுங்கை,
மானிப்பாய்.

மலர் தூவி அஞ்சலிக்கும்
குடும்பத்தினர்

(27185)(32-16-17)


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

| | |
|---|---|
| சீட்டிழுப்பு வாரம் | 543 |
| திகதி | 13.01.2004 |

டிக்கட்டின் நிறம் - நீலம்

செல்லுபடியாகும் தொடர் இல.
4459212-4474791

வெற்றி இலக்கங்கள் **17 26 39 55**

லக்கினம்

கும்பம்

ஜக்பொட் பரிசு
ரூபா. 3,257,350/-
வெல்லப்பட்டுள்ளது.



இந்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூபா **1,000,000/-**

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை(ரூ.) | மொத்தப் பரிசுத் தொகை(ரூ.) |
|---|---|---|---|
| 1 இல | 345,963 | 10 | 3,459,630 |
| 2 இலக்கங்கள் | 31,852 | 20 | 637,040 |
| 1 இல + லக்கினம் | 31,541 | 30 | 946,230 |
| 2 இல + லக்கினம் | 2,900 | 100 | 290,000 |
| 3 இலக்கங்கள் | 857 | 500 | 428,500 |
| 3 இல + லக்கினம் | 71 | 5,000 | 355,000 |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000 | 400,000 |
| 4 இல + லக்கினம் | 01 | 3,257,350 | 3,257,350 |
| மொத்தம் | 413,189 | - | 9,773,750 |

மொத்தப் பரிசுத் தொகை ரூபா.9,773,750/-

தொடர் இல. 5446389க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுகள்
2004 ஜனவரி 16ம் திகதி வெள்ளிக்கிழமை செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கல் வீதி,
கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

அபிவிருத்தி அதிர்ஷ்ட சீட்டிழுப்பில்
பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில்
முச்சக்கர வண்டி வெற்றி பெறும்
5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

4466672-2-40
4465414-1-05
4461491-1-05
4470078-0-55
4462545-5-59

PHOENIX O&M


# மரண அறிவித்தல்கள்

## மயில்வாகனம் துரைராஜா

(வேலணை மேற்கு சிற்பனை)

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பில் வசித்தவருமாகிய மயில்வாகனம் துரைராஜா அவர்கள் நேற்று (14.01.2004) கொழும்பில் சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - தங்கம்மா தம்பதியினரின் புதல்வரும் காலஞ்சென்ற கதிர்காமர் - தங்கம்மா தம்பதியினரின் மருமகனும், ராஜலெட்சுமி (சிவயோகம்) அவர்களின் அன்புக் கணவரும் அருந்தவச்செல்வி, சறோஜாதேவி, அருந்தவநாதன் (அமிக்கோ என்ரபிறைஸ், கொழும்பு), சிவநாதன் (அமிக்கோ அரிசி ஆலை வவுனியா), வசந்தா, ஸ்ரீநாதன் (லண்டன்), வனிதா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் தணிகாசலம் (கவிதா ஸ்ரோர்ஸ் வவுனியா), காலஞ்சென்ற பிரகலாதன் மற்றும் சிவகுமாரி, ஸ்ரீலோஜினி, சிலம்பின் செல்வன் (தாரணி குறோசறீஸ் கொழும்பு), கமலேஸ்வரி (லண்டன்), ஞானகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற விநாயகமூர்த்தி (சம்புலிங்கம்) காலஞ்சென்ற அருளம்மா மற்றும் கமலாம்பிகை ஆகியோரின் அருமை அண்ணாவும், புஸ்பகாந்தியம்மா (லண்டன்), சுப்பிரமணியம், காலஞ்சென்ற நாகராஜா மற்றும் V.Kகனகரட்ணம், காலஞ்சென்ற கங்கநாதன், புனிதவதி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான கனகசபாபதி கமலாம்பிகை, V.K.கனகரெட்ணம் ராஜலெட்சுமி, நல்லையா பாலசரஸ்வதி, காலஞ்சென்றவர்களான தனபாலசிங்கம் கமலம்மா, காலஞ்சென்ற புத்திரகொண்டார், மனோன்மணி காலஞ்சென்ற நாகராஜா, கமலாம்பிகை ஆகியோரின் சம்பந்தியும் திருப்பரன், (லண்டன்), தயாநிதி, ஜெயபரன்(லண்டன்), கலாநிதி, மனோநிதி, சரவணபவன், ரமேஸ்குமார், ராஜ்குமார், சசிகுமார், ஜனகன், சதீஸ்குமார், செந்தூரன், ஆர்த்திகா, சேயோன், கௌதராம், சகானா, அனுசானா, தாரணி, ஆருஷன், ஆதவன், ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் புதவுடல் இல 15 ,ரம்ஜா வீதி, கொழும்பு-4 இல்லத்தில் வியாழக்கிழமை வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகளுக்காக பூதவுடல் 18.01.2004 ஞாயிற்றுக்கிழமை காலை ஜெயவர்த்தன மலர்ச் சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு, மாலை 3 மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று, கனத்தை இந்து மயானத்தில் மாலை 5 மணிக்கு தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர், நண்பார்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15,ரம்ஜா வீதி,*
*கொழும்பு-4,*
*T.P no:2593345.*

(சி-32798)(16-17)

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள்.

## குமாரு ஆறுமுகம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குமாரு ஆறுமுகம் 14-01-2004 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-01-2004) வியாழக்கிழமை பி.ப.2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் ,உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

இணுவில்மேற்கு,
இணுவில்.

(சி-27186)(16-17)

தகவல்:
திருநாவுக்கரசு
(மருமகன்)


நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள், பாவனையாளர்கள் அனைவருக்கும்
எமது பொங்கல் வாழ்த்துக்கள்

V.S.S All Natural

V.S.S LUNCH GINGELLY OIL

வி.எஸ்.எஸ் சாப்பாட்டு நல்லெண்ணெய்

சகல விதமான உணவுத்தேவைகளுக்காக சுத்தமான முறையில் தயாரிக்கப்பட்டது.

தயாரிப்பாளரும் விநியோகஸ்தரும்

V.S. சுந்தரலிங்கம்,
சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை.

ஸ்ரீரங்கன் களஞ்சியம்,
ஆடியபாத வீதி,
திருநெல்வேலி.

T.P: 021-2222975

(27081)(32-16-17)

லஷ்சுமி சினிமா இணுவில்

எமது ரசிகர்களுக்கு
பொங்கல் வாழ்த்துக்கள்
பொங்கல் வெளியீடு
பாலா, மணிவண்ணன், விவேக்
நடித்த
காதல் கிறுக்கன் (ரீல்ஸ்)
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30 (பி.நே.)
(C-32799) (32)

நிரஞ்சனாஸ் சாவகச்சேரி

எமது ரசிகர்களுக்கு
பொங்கல் வாழ்த்துக்கள்
இன்று முதல்
சரண், வீராநாயகன் நடித்த
உன்னை சரணடைந்தேன்
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45
Tomv Raider - 2
(C-32370) (32)

# ஜனாதிபதியுடன் திரைமறைவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பாட்டில் இருந்து நீங்கள் விலகும்பட்சத்தில், யுத்தத்தை உடன் ஆரம்பிப்பீர்களா? அல்லது சமாதானத்தின் மீதுள்ள ஆர்வத்தை சர்வதேச சமூகத்துக்கு எடுத்துக்கூறுவீர்களா?

■ பதில்: "யுத்தம் எம்மீது திணிக்கப்படும்போது அதை எதிர்கொண்டு எங்கள் தேசத்தையும் மக்களையும் காப்பாற்றுகின்ற நிலைப்பாடு எமக்குள்ளது. அதில் எப்போதும் நாம் உறுதியோடும் தெளிவோடும் இருக்கின்றோம" - என்று எமது தலைவர் சர்வதேச பிரதிநிதிகளிடம் தெளிவாகக் கூறியுள்ளார்.

நாங்களாகவே வலிந்து ஒரு யுத்தத்தை - சண்டையை - ஆரம்பிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. ஏனெனில், எங்கள் மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் ஒன்றை உருவாக்குவதற்காக நாம் செயற்படுகின்றோம். ஆகவே, யுத்தமும் அவலமும் நெருக்கடியும் இல்லாது அமைதி வழியில் தீர்வு காணக் கிடைக்கும் வழிகளை நல்லமுறையில் பயன்படுத்துவோம், அதற்கான முயற்சிகளையும் நாம் செய்வோம்.

யுத்தம் வலிந்து எம்மீது திணிக்கப்படும்போது அதை எதிர்கொண்டு மக்களையும் தேசத்தையும் பாதுகாக்கும் பணியை நாம் சரியாகச் செய்வோம். இதைத் தலைவர் அடிக்கடி வலியுறுத்தியுள்ளார். இதுதான் எமது நிலைப்பாடாகும்.

★ கேள்வி: சமாதான முயற்சிகளை முன்னெடுக்க ஜனாதிபதி சந்திரிகா திரைமறைவில் முயற்சிகளை மேற்கொள்கிறார் என்று செய்திகள் வெளிவருகின்றனவே. அவை குறித்து..?

■ பதில் : திரைமறைவில் செய்வதையெல்லாம் எப்போதும் நாம் ஏற்றுக் கொள்வதில்லை. எமது மக்கள், தேசம், அவர்களது சுதந்திரம், உரிமை என இலட்சியத்திற்காக நாம் போராடுகின்றோம். அந்த வகையில், எமது தலைவர் சமாதான முயற்சிகளையோ, அரசியல் முன்னெடுப்புக்களையோ பகிரங்கமாகத்தான் மேற்கொள்வார். எமது நடவடிக்கைகள் மக்களுக்கு தெரியப்படுத்தப்படும். ஊடகங்கள் ஊடாகவோ அல்லது வேறு வழிகளிலோ இவை குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்துவதில் நாம் பின்நிற்பதில்லை.

இந்த விடயத்தில், இரகசியத் தன்மை ஏதும் இருக்கத் தேவையில்லை. இன்று சர்வதேச சமூகம் எமது விவகாரத்தில் இணைந்துகொண்டுள்ளது. சமாதான முன்னெடுப்புகளில் உலகநாடுகளின் ஈடுபாடும் அனுசரணையும் இருக்கின்றன. ஆகவே, அவை தொடர்பான விடயங்களை இரகசியமான முறையில் செய்யவேண்டிய தேவையில்லை.

சந்திரிகா அம்மையாருடன் நாம் எதுவித இரகசியத் தொடர்புகளையும் ஏற்படுத்தவில்லை. அவர் எம்முடன் தொடர்பை ஏற்படுத்தினார் என்று செய்திகள் வருகின்றன. ஆனால், நாம் அவை குறித்து அறியவில்லை.

வெளிப்படையான பேச்சுக்கள், அரசியல் நகர்வுகள் ஆகியவை இடம்பெறவேண்டும் என்பதுதான் எமது தலைவரின் நிலைப்பாடு.

★ கேள்வி: அதிகாரம் உள்ள - மககள் ஆணையைப் பெற்ற - அரசு ஒன்றுடன் பேசுவோம் என நீங்கள் கூறுகிறீர்கள். அப்படியாயின் தெற்கில் தேர்தல் ஒன்று இடம்பெற்று புதிய ஆட்சி ஒன்று உருவாகும் வரை யுத்தநிறுத்த உடன்பாட்டை நீங்கள் கடைப்பிடிப்பீர்களா?

■ பதில்: யுத்தநிறுத்தத்தை இலங்கைப் படைகள் மதித்து நடக்கும் வரை இங்கு யுத்தநிறுத்தம் செம்மையாக நடைமுறைப்படுத்தப்படும். அதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

இலங்கைப் படைகள் உடன்பாட்டை மீறி யுத்தத்தை எம்மீது திணிக்கும்போதுதான். யுத்த நிறுத்த சூழல் நெருக்கடி நிலைக்குத் தள்ளப்படும். அந்த நேரத்தில் நாம் எமது முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும்.

ஆனால், சமாதானப் பேச்சுக்களைப் பொறுத்தவரையில் எமக்கு இன்னமும் குழப்ப நிலை தொடர்கிறது. அரசிடம் ஓர் அதிகாரமும் ஜனாதிபதியிடம் பாதுகாப்பு அமைச்சுப் போன்ற சில அமைச்சுக்களுடன் நிறைவேற்று அதிகாரமும் எனத் தெற்கில் ஒரு சிக்கில் நிலை நிலவுகிறது.

எந்த அதிகார மையத்துடன் நாம் பேசுவது என்பதில் எமக்கு குழப்பமாக உள்ளது.

சிங்கள மக்கள் சமாதானத்தற்கான ஆணையை ரணிலுக்கு வழங்கியதால் தான் நாம் அவருடன் பேச முற்பட்டோம். அத்துடன், அவரிடம் பாதுகாப்புத்துறை சார் அதிகாரங்கள் எல்லாம் அப்போது இருந்தன. அதனால், நாம் அவருடன் பேசினோம். ஆனால், இன்று நிலைமை மாறிவிட்டது.

மககள் ஆணைபெற்ற - முழு அதிகாரமுள்ள - அதிகார மையத்துடன் தான் எமது பேச்சுக்களும் நகர்வுகளும் இருக்கும் எனத் தெளிவாக நாம் அறிவித்துள்ளோம்.

★ கேள்வி: அந்த அதிகார மையம் உருவாகும் வரை புரிந்துணர்வு ஒப்பந்தத்தை தொடர்ந்து கடைப்பிடிப்பீர்களா?

■ பதில்: தேர்தல் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன மக்களின் நம்மை கருதி சில முடிவுகளை எடுக்கவேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்படுவோம்.

எமது மக்கள் தற்போது பெரும் மனிதாபிமான நெருக்கடியை சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். கடந்த 2 வருடங்களில் தாயகத்தில் எந்தவித முன்னேற்றமும் இல்லை; இயல்பு நிலை ஏற்படவில்லை; மீள்குடியமர வேண்டிய மக்கள் மீள்குடியமரவில்லை; தொழில் முயற்சிகள் இல்லை.

அமைதி, சமாதானம் என்று சொல்லிக்கொண்டு மக்களின் வாழ்வு சீரழிந்து போவதை - நெருக்கடியை நோக்கித் தள்ளப்படுவதை - தொடர்ந்து நாம் அனுமதிக்கமுடியாது. நிதானமாக நிலைமையை அவதானித்துக்கொண்டிருக்கிறோம். மக்களின் ஆலோசனைகளைப் பெற்றுச் செயற்படுவோம்.

★ கேள்வி: நாடாளுமன்றம் கலைக்கப்படும்போது ரணில் பிரதமர் பதவி இழக்கும்போது - யுத்தநிறுத்த உடன்படிக்கையும் செல்லுபடியற்றதாகுமா?

■ பதில்: யுத்தநிறுத்த உடன்படிக்கையைப் பொறுத்த வரை இது சர்வதேச உத்தரவாதத்தின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதில் சில ஒழுங்குகள் இருக்கின்றன. அனுசரணையாளர், கண்காணிப்பாளர்கள் ஆகியோர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். சர்வதேச சமூகம் இதனை அவதானித்து வருகிறது. பல்வேறுபட்ட தரப்புகளின் ஈடுபாடு இருப்பதால் அவற்றின் வெளிப்பாடுகளைப் பொறுத்துத்தான் நாம் முடிவுகளை எடுப்போம்.

- இப்படி அவர் கூறினார்.(ஐ-3)

## கிட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிகழ்வுகளுடன் கேணல் கிட்டு உட்பட பத்து வீரவேங்கைகளின் புனரமைக்கப்பட்ட நினைவுச் சின்னங் கள் திரைநீக்கம் செய்துவைக்கபபடும். நினைவுரைகளும் இடம்பெறும்.

நாளை காலை 9 மணிக்கு முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள கிட்டு பூங்காவில் விசேட நினைவு நிகழ்வுகள் இடம்பெறும். பொதுமக்கள், விடுதலைப் புலிகளின் போராளிகள் எனப் பலர் இந்த நிகழ்வில் கலந்து அஞ்சலிசெலுத்துவர். (ஐ-3-30-17-8-4)

# பட்டாசினால் மூவர் காயம்!

யாழ்ப்பாணம்,ஜன.15

பட்டாசு கொளுத்திய சம்பவங்களில் காயமடைந்த மூவர் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர்.

எஸ்.சத்தியநாதன்(வயது 52-தாவடி வடக்கு), மகாதேவா யுவதேவா (வயது 23 - அரியாலை) , பிரான்சிஸ் சந்துரு (வயது 13 - ஆனைக்கோட்டை) ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

எஸ்.சத்தியநாதன் என்பவர் வாணவெடி கொளுத்தியபோது அது கையிலேயே வெடித்ததில் வலது கண்ணில் படுகாயமடைந்தார்.

இதேவேளை -

பொதுமக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்தும் வகையில் பட்டாசு கொளுத்திய சம்பவங்கள் பல இடங்களிலும் இடம் பெற்றுள்ளன. (ஐ-7-9)

## லண்டனில் நேற்று சந்திப்பு

நோர்வேயின் சிறப்புத்தூதுவர் எரிக்சொல்ஹெய்ம், விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தை நேற்று லண்டனில் சந்தித்து சமாதான முயற்சிகளில் ஏற்பட்டுள்ள தேக்க நிலைகுறித்துப்பேச்சு நடத்தினார்.

(வ)

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தரப்பு மாநாட்டில் இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்கு இத்தகைய கூட்டணி ஒன்று அவசியமென இரண்டு கட்சிகளும் கூட்டாகத் தெரிவித்துள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால ஸ்ரீசேனவும் மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரி.என். சில்வாவும் கைச்சாத்திட்ட கூட்டறிக்கையில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணி தொடர்பாக இரு கட்சிகளும் கடந்த பத்துமாதகாலம் பல சுற்றுப்பேச்சு நடத்தி வந்தன.

உடன்படிக்கை கைச்சாத்திடப்படும் வைபவத்தை விமரிசையாகக் கொண்டாடுவதற்கு இரு தரப்புகளும் திட்டமிட்டுள்ளன. (ஐ-7)

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
துள்ளன என்றும் - அவர் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு திட்டமிடல், அபிவிருத்தியை மையமாகக்கொண்டு விடுதலைப் புலிகளால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தச் செயலகம்மூலம் திட்டங்கள் இனங்காணப்படும் என்றும் அவர் கூறினார்.

உதவி வழங்கும் நாடுகளுடனும் நிறுவனங்களுடனும் புரிந்துணர்வை ஏற்படுத்த இக்கூட்டம் கூட்டப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கு நோர்வே முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று நோர்வே தூதர் ஹன்ஸ் பிரஸ்கர், ஜோய் மகேஸ்வரனிடம் உறுதியளித்திருக்கின்றார். (ஐ-3)

## மாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நாட்டு வெளிவிவகார அமைச்சர் விடா ஹெல்கிஸனுடனும் தமிழ்ச்செல்வன் முக்கிய பேச்சுக்களை நடத்துவார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.30 மணிக்கு கொழும்பிலிருந்து விசேட ஹெலி மூலம் கிளிநொச்சிக்கு வந்த நோர்வேத் தூதுவர், முதலில் விடுதலைப் புலிகளின் திட்டமிடல் அபிவிருத்திச் செயலகத்துக்குச் சென்று கலந்துரையாடினார்.

அதன்பின், தமிழ்ச்செல்வனை சமாதானச் செயலகத்தில் சந்தித்து 90 நிமிடங்கள் பேசினார். (ஐ-3)

## இடைக்கால...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ராஜசிங்கம் ஆகியோர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதி மன்றம் நிராகரித்தது.

தமது அனுமதியின்றி கட்சியின் எந்தவொரு கூட்டத்தையும் நடத்த அனுமதிக்கக் கூடாது என்று தெரிவித்து வீ.ஆனந்தசங்கரி தாக்கல் செய்த மனு தொடர்பாக மேற்படி இடைக்காலத் தடை உத்தரவை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் விடுத்திருந்தது.

நேற்று இம்மனு நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம், மேற்படி இடைக்காலத் தடை உத்தரவை நீக்கக்கோரி எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்த விண்ணப்பம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அந்த விண்ணப்பத்தை நிராகரித்த நீதிபதி, ஏற்கனவே தாம் விடுத்த இடைக்காலத் தடை உத்தரவை எதிர்வரும் 26ஆம் திகதிவரை நடைமுறையில் இருக்கக்கூடியதாக நீடித்தார்.

(எ)


## 16 ஆம் நாள் நினைவலைகள்

தேற்றம்
01 . 08 . 1937



மறைவு
01 . 01 . 2004

**அமரர் சிவானந்தம் வாதவூரன்**

(மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் இனுவிலை வசிப்பிடமாகக் கொண்வரும் தற்போது பிரான்ஸில் வசித்தவருமான பரந்தன் இரசாயனக் கூட்டுத் தாபன முன்னாள் போர்மன்)

கடந்த 01.01.2004 அன்று காலமான எமது அன்புத்தெய்வத்தின் 16 ஆம் நாள் நினைவும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (16.01.2004) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதியபோசனத்திலும் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

இனுவில். (சி-32800)(36-17-18) மனைவி, பிள்ளைகள்.

## நோக்கம் நிறைவேறியது

**A/L 2006** இற்கான
கணக்கீட்டிற்கான தனிப்பாட அனுமதி இன்றிலிருந்து வழங்கப்படுகிறது.

கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A.(F.M. Spl.)
Sat., Sun => 10.30 -11.30(S.L.T)

விக்னா
கல்வி நிறுவனம் (சி-32769)(36)




உங்களது
நன்மதிப்பைப் பெற்ற
டோக்கியோ சீமெந்து
நிறுவனம் வழங்கும் மிற்சுயி,
ஹினோடே

இலங்கை
மக்களின் நம்பிக்கையை
மேலும் வலுப்படுத்தி
கட்டட நிர்மாணத்
துறையில் புத்தொளி
பரப்புகின்றது.




## "பொங்கலோ பொங்கல்"



யாழ்ப்பாணம், இல, 487, ஆஸ்பத்திரி வீதி,
சிற்றி மெடிக்கல் கட்டடத்தில் இயங்கும்.

TNT
கூரியர் சேவை
TNT

வழங்கும் ஸ்தாபனத்தார்
இன்றைய தைப்பொங்கல் திருநாளில்
அன்பர்கள், ஆதரவாளர்கள்
அனைவருக்கும் பொங்கல்
வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில்
பெருமகிழ்ச்சி அடைகிறார்கள்.

021 -2223771
0777-270452 (சி-32797)(36)

## மரண அறிவித்தல்

**செல்லப்பா துரைராசா**

இணுவிலைப் பிறப்பிடமாகவும் நெட்டிலிப்பாய், கோண்டாவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா துரைராசா(இளைப்பாறிய களஞ்சியப் பொறுப்பாளர் - றொமேரி எஸ்டேட் பதுளை) அவர்கள் நேற்று (14.01.2004) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஞானாபரணத்தின் அன்புக் கணவரும் சிவசக்தி, சிவரூபன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகிர்தா(கனடா), ஞானசம்பந்தர் ஆகியோரின் மாமனாரும் விதுரன்(மகாஜனக்கல்லூரி மாணவன்) வானதி, பீஷ்மன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெட்டிலிப்பாய் ,
கோண்டாவில் மேற்கு. (சி-32801) (36-16-18)

தகவல்:
து.ஞானாபரணம்
(மனைவி.)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.01.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



தைத்திருநாளில்
இல்லங்கள் எங்கும்
சமாதானமும்
மகிழ்ச்சியும்
பொங்கட்டும்
NSB
தேசிய சேமிப்பு வங்கி




பாரினில் அமைதி பற்றிப் பரவிட
தேடிவரும் இத்திருநாளில்
உழைக்கும் மக்கள் அனைவருக்கும்
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
கௌரவ அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானும்
அமைச்சு அதிகாரிகளும், ஊழியர்களும்.
வீடமைப்பு, பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு.




புதிய கோலம் போட நினைக்கிறீர்களா?
இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!
Rainco



எங்கும் இன்பம் பொங்கும் தைப்பொங்கல்

Grant McCann

கதிரவனின் அருட்கொடை ஆண்டு முழுவதும் உங்கள் மீது பொழியட்டும்.
வாழ்வில் வளம் பெருகிப் பொங்க அனைத்து இலங்கையரையும் ஸ்ரீலங்கன் வாழ்த்துகிறது.
www.srilankan.aero

நீங்களே எங்கள் உலகம்

SriLankan Airlines

அனைத்தும் எயார்பஸ் விமானங்கள் • தனிப்பட்ட தொலைக்காட்சி / தொலைபேசி • 40 அலைவரிசைகளில் பன்மொழிப் பொழுதுபோக்கு நிகழ்ச்சி • சர்வதேச பல்சுவை உணவு